# விடியல்

## சமூக அறிவியல் இதழ்

ஆடி, ஆவணி

இதழ் 02





**தந்திர நாடகத்தின் மிகச்சிறந்த நடிகர்**



விலை: 50ரூபா












**கலை, அரசியல், சமூக இதழான விடியல் எனும் சஞ்சிகையின் வெளியீட்டு விழா கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் 24.06.2018 வெளியிட்டு வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் M.A. சுமந்திரன் வெளியிட்டு வைக்க, நூலின் ஆய்வுரையினை பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் A.C. அரியகுமார் அவர்கள் ஆற்றினார்.**

**நன்றி தீபம்**

# விடியல்

கலை, அரசியல் சமூக இதழ்

திசை 01 ஒளி 02

ஆடி 2018

பிரதம ஆசிரியர் : ச.சாரு

உதவி ஆசிரியர் : தரணி

விலை : 50 ரூபா

பதிப்பு : ஸ்நேகன், கொடிகாமம் வீதி, நெல்லியடி

பக்கவ. அட்டை டிவமைப்பு : ஷகி

முகவரி : வத்திராயன் வடக்கு, தாளையடி.

face book - விடியல் விடியல்

vidiyalmagazine@gmail.com

T.P: 0702083803


## புதுவிடியல்

முதலாவது இதழில் உள்ள சில தவறுகளைத் திருத்திக்கொண்டு புதிய படைப்பாளிகளுக்கும் சந்தர்ப்பத்தினை வழங்கி இரண்டாவது இதழ் வெளிவருகின்றது என்பதனை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாகாண திருவிழாவுக்கு கொடியேற்றப்பட்டு விட்டது என் பதனை பத்திரிகையினூடாக யாவரும் அறிந்து வரும் நிலையில் வீரப்பேச்சுப் பேசி தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் தலைவர்களை அரசியல் அரங்கில் இருந்து அகற்றி புதிய அரசியல் அமைப்புக்காக குரல் கொடுக்கும் துணிச்சலுள்ளவராகவும் மக்களின் நலன்களை மாகாணசபை ஊடாக பெற்றுக் கொள்ளக்கூடியவர்களையே வடக்கு மாகாண சபைக்கு தேர்ந் தெடுக்கப்படுவதன் மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

●



# ஆருக்குச் சொல்லியழ

அன்று சனிக்கிழமை. வாமன் அவசர அவசரமாக வெளியே புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். மனைவியிடம் விபரம் சொல்லிக் கொள்ளாமல் அவன் எங்கும் செல்வதுமில்லை. சென் றதுமில்லை. ஆனால் இன்று இதுவரை அவளிடம் எதுவும் சொல்லவில்லை.

மனைவி ஆரபி ஓரளவு படித்தவள். மற்றவர்களைப் படித் தவள் என்பதை எவரிடத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் காட்டிப் பெருமைப்பட விரும்பாதவள். காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டவர்களாதலால் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழப்பழகியிருந்தாள்.

தனது கணவன் தனக்கு இதுவரை ஒன்றுமே தெரிவித்துக் கொள்ளாமல் புறப்படத் தயாராக இருப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இருந்தாலும் அவளாக எதையும் கேட்க முனையவில்லை. ஏனெனில் இதுவரை அவன் சொல்லிக் கொள்ளாமல் எங்கும் சென்றதில்லையே. ஆகவே இறுதிவரை அமைதியாக இருந்தாள்.

கண்ணாடியில் தன் உடைகளின் இருப்பைச் சரி பார்த்துக் கொண்ட வாமன் மெல்ல மனைவியின் அருகில் சென்றுஇ "ஆரபி! என்னோட வேலை செய்த ரவியை தெரியுந்தானே!

அவன்ர சித்தப்பா முறையான ஒருவர் மோசம் போயிற்றார். காலையில பேப்பரிலதான் பார்த்தன். சரியில்லை, அவன் என்னோட அந்த மாதிரி பழகினவன். ஒருக்கா போயிற்று வாறன் என்னடா. இண்டைக்கு சமையலுக்கு எல்லாம் இருக்குத்தானே.

சின்னமாமா சிலவேளை என்னைத்தேடி வருவார். கோயில் அலுவலாய் ஏதோ கதைக்க வேணும் என்று சொன்னவர். அப்பிடி வந்தால் இரவைக்கு வரட்டாம் என்று சொல்லுங்கோ என்ன?" என்று சொல்லிக் கொண்டே சைக்கிளை உருட்டினான் வாமன்.

''கவனமாகப் போயிட்டு வாங்கோ் வேறை ஓரிடமும் வினைக் கெடாமல் வாங்கோ் பிள்ளைக்கு மெல்லிய காய்ச்சலாய் இருக்கிற மாதிரி தெரியுது. வந்தால் மருந்தெடுக்கலாம் என்னப்பா" என்று அன்போடு விடை கொடுத்தாள் ஆரபி.

ரவி வாமனுக்கு உறவில்லைத் தான். ஆனால் இருவரும் வேலை செய்த இடத்தில் பழகிக்கொண்டதனால் ஏற்பட்ட நெருக்கம் உறவென்பதை விடவும் பலமாக இருந்தது.

சில வேளைகளில் அடுத்தவர்களின் குறைபாடுகளைக் கண்டால் வாமன் அவற்றைக் கவலையுடன் சிலா

கித்துக் கதைப்பான். உடனே ரவி வாமனைப் பார்த்து "அண்ணை நான் என்ன மாதிரி?" என்று கேட்டு விட்டுச் சிரிப்பான். "நீ அந்த மாதிரி" என்று வாமன் சொல்ல இரண்டு பேரும் கெக்கட்டமிட்டுச் சிரிப்பார்கள். இது வரை அவர்களுக்குள் எந்தவித பிரச்சினையும் வந்ததில்லை. அப்படி அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த நெருக்கம்தான் வாமனை அவசரமாக அந்த சாவீட்டிற்குத் துரத்திக்கொண்டி ருந்தது.

போர்க்கால சூழ்நிலையால் எல் லோரும் இடம் மாறிக்கொண்டிருந்த நேரமது. ரவியும் தன்னுடைய சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து வேறொரு உறவினர் வீட்டிலேதான் குடியிருந்தான்.

வெளிநாட்டிற்குச் செல்பவர்கள் எப்படியான சொகுசு வாழ்க்கை வாழ்ந்தாலும் ஏதோ உணர்வுகள் மேலிடும் பொழுது "என்ன இருந்தாலும் சொந்த நாடு போல வராது" என்பார்கள். யாரோ ஒருவருடைய வீட்டில் சௌகரியமாக வாழ்ந்தாலும் தன்னுடைய வீடு போல் வராது என்பார்கள். தண்ணியைக் குடித்தாலும் தன் வீட்டுத் தண்ணி போல் வராது என்பார் சிலர்.

இது போலத்தான் ரவியின் வாழ்க்கையும் ஓடிக்கொண்டிருந்தது. ஒரு வீட்டில் நாலைந்து குடும்பங்கள். சுதந்திர மாக எதையும் செய்து கொள்வது கஷ்ட மானது. அதற்குள் இப்படியும் ஒரு துன்ப நிகழ்வு. சாவீட்டை நினைப்பதை விட ரவியைப் பற்றியே சிந்தித்துக்கொண்ட வாமனின் எண்ணங்கள் அவனுடைய சைக்கிளைப் போலவே வளைந்து நெளிந்து சென்று கொண்டிருந்தன.

சாவீட்டைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கக்கூடாது என்பது போல இடைக்கிடை எழுந்த பறையின் ஒலி வழிகாட்டிக் கொண்டிருந்தது. தெருவெங்கும் தோரணங்கள் தொங்கின. அவற்றுள் சில தொங்கிய விதம் வாமனுக்குபழைய நினைவொன்றை ஞாபகப்படுத்தியது.

வாமன் படித்துக்கொண்டிருந்த காலம் ஊரிலே நிகழ்ந்த ஒரு சாவீட்டில் நண்பர் களுடன் சேர்ந்து தோரணம் பின்னிக் கொண்டிருந்தான் வாமன். அவன் பின்னிய தோரணம் பிழையாக பின்னப்படுகிறது என்பதை அவனுடையபேரன் முறையான ஒருவர் அவனுக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

மங்கலமான நிகழ்வுகளின் போது தோரணத்தின் இதழ்கள் ஐந்தாக இருக்க வேண்டுமென்பதுடன் அந்த இதழ்களின் நுனி நிலத்தை நோக்கி இருக்க வேண்டும் என்றும், அமங்கலமான நிகழ்வுகளின் போது தோரணங்களின் இதழ்கள் மூன்றாக இருப்பதுடன் அவற்றின் இதழ் நுனிகள் வானத்தை நோக்கி இருக்க வேண்டும் என்றும் அவர் சொல்லி விளங்கப்படுத்தியது ஞாபகத்திற்கு வர, தன்னைப் போல யாரோ ஒருவர் அங்கிருந்து தோரணம் பின்னுவதாக எண்ணி மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

சாவீடு நெருங்கி விட்டது. தகரப் பந்தல் எதையும் காணவில்லை. அந்தப் பிரதேசத்தில் தகரப்பந்தல்

வாடகைக்கு விடுபவர்கள் பலர் இருந்தும்கூட போர்க்கால சூழல் அதனை தடுத்திருக்கலாம் என வாமன் எண்ணிக்கொண்டான்.

பாவித்துப் பழுதாகி இருந்த தறப்பாள்கள் சாவீட்டில் நிழல் விழுத்திக் கொண்டிருந்தன. சூரிய ஒளியின் வருகையை இடைக்கிடை அவை அனுமதித்துக் கொண்டன.

சாவீடுகளில் அழுவதற்கு இப்பொழுதும் ஆட்கள் இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக ஓரிரு குரல்கள் அழுது வடிந்து கொண்டிருந்தன.

வாசலில் யாருடனோ கதைத்துக் கொண்டிருந்த ரவி வாமனைக் கண்டதும் ஓடோடி வந்தான். வாமன் ரவியின் கைகளைப் பற்றியபடி அவனையே பார்த்துக்கொண்டு நின்றான்.

அவனுடைய பழைய தோற்றம் வாமனின் கண்களில் நிழலாடியது. இடம்பெயர்வினால் மிகவும் களைத்து வாடிப்போயிருந்தான் ரவி. இடையே உறவினர் ஒருவரின் அழைப்புக்குரல் அவனை நகர வைத் தது.

வாமன் அருகில் இருந்த கதிரையொன்றில் அமர்ந்து கொண்டான். அவன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து கொண்டு அங்கு நடக்கும் விடயங்கள் எல்லாவற்றையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது.

வயது முதிர்ந்த ஒருசிலர் இளை ஞர்களுக்கு செய்ய வேண்டிய காரியங் கள் பற்றிக் கட்டளையிட்டுக் கொண்டிரு ந்தனர். விறுவிறுப்பான இளைஞர்கள் சிலர் யாருடைய ஏவல்களுமின்றி ஓடியாடி அலுவல் களைச் செய்து கொண்டி ருந்தனர்.

பறை ஒலி எழுப்புபவர்கள் ஒரு சிலர் வரும் போது ஒலியெழுப்புவதும், வேறுசிலர் வரும்போது பேசாமல் இருப் பதுமாக இருப்பதை வாமன் அவதானித் தான். ஊருக்குப் பெரியவர்கள், இறந்தவரின் உறவினர்கள் வரும்போது அவர்களை இனங்காட்டுவதற்கும், மதிப்பளிப்பதற்குமாகவே இப்படியான செயல்கள் நடைபெறுவதாக யாரோ சொன்னது ஞாபகம் வந்தது.

அங்கு கூடியிருந்த பெண்களில் ஒரு சிலர் சாவீட்டிற்கென வந்துகொண்டிருந்த பெண்களை கட்டியணைத்து ஒப்பாரி சொல்லி அழுது கொண்டிருந்தார்கள்.



யாரோ ஒருவர் படித்த பெண்ணாகவும் சமகாலத்தைப் புரிந்து கொண்ட பெண்ணாகவும் இருக்க வேண்டும், அந்தப் பெண்ணின் குரல் இப்படியாக வெளிவந்தது. "பிஞ்சுகளை பலியெடுத்த பாழாகிப்போன யமன் இப்போதான் உங்களையும் கண்டிங்கு வந்தானோ? நீர் போன சேதி சொல்ல

ஆட்களுமோ இல்லை ஐயா! சேதி அறிந்தவரும் வந்திறங்க முடிய வில்லை அழக்கூட முடியாமல் வாய்மூடி அழுகிறமே'' என்று வளைத்து நெளித்து எதையோ வெளிப் படுத்துவது போல அந்தக் குரல் எல்லோரையும் ஒரு கணம் கவர்ந்து இழுத்துக் கொண்டது.

என்ன நடந்தாலும் நடக்கட்டும் தனக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்பது போல ஐயர் தன்னு டைய கிரியை வேலைகளைக் கவனித் துக் கொண்டிருந்தார். இறந்தவரின் உடல் குளிப்பாட்டப்பட்டு கொண்டு வந்து அகன்ற வாங்கில் ஒன்றில் வைக்கப் பட்டது.

ஐயரும் பொற்சுண்ணம் பாடுவதற்கு தயா ராகிக்கொண்டிருக்க இன்னொருபுறம் சிறு சலசலப்புச் சத்தம் கேட்டது. வாமன் திரும்பிப் பார்த்தான்.

"தம்பி! வெளியில நிக்கிற பொடி யனுக்கு இதைக்காணக்குடுத்து வைக்கல. ஆரட்டையேனும் கமரா இருந்தால் ரண்டு போட்டோவை அடியுங்கோவனய்யா''

இது ஒரு அரைவயதுக்காரரின் கட்டளை யாக பிரவாகித்து மெல்ல மெல்ல எல்லோர் வாயிலும் வழமை யானது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொண்டனர்.

இரண்டு இளைஞர்கள் தங்க ளுக்குள் குசுகுசுத்துக்கொண்டனர். "என்னட்ட கமரா இருக்கு மச்சான், பிலிம்ரோல் இல்லை.'' என்றான் ஒருவன். "பிரச்சனை இல்லை மச்சான் நீ அதை எடுத்து வா. ரஞ்சண் ணையிட்ட பிலிம்ரோல் வாங்கலாம். கெதியாய் வா.'' என்றான் மற்றவன்.

கமராவும் வந்து விட்டது. பிலிம் ரோலும் உள்ளே நுழைந்து கொள்ள, கமரா வெளிச்சம் கக்கிப் பார்த்தது. ஐயரின் முகம் கமராவுக்குள் முதலில் இறங்கியது. உலக்கையுடன் நின்ற மகன், அழுது கொண்டிருந்த பெண் கள், இறந்தவரின் உடல் வைக் கப்பட்டிருந்த பெட்டி, உரல் உலக்கை, அம்மி குளவி, இப்படி எல்லாவற் றையும் அளவெடுத்த கமரா சிறிது நேரம் ஓய்வெடுக்கப் பார்த்தது.

கமரா வைத்திருந்த இளைஞ னைப் பார்த்து அதற்குள் ஓடியாடிக் கொண்டிருந்த ஒருவர் "தம்பி வடிவாய் எடுக்க வேணும் ஒண்டையும் விடாதை யும் வெளியில நிக்கிற பொடியனுக்கு அனுப்பவேணும், அதற்கேற்ற மாதிரி அடி தம்பி!'' என்றார்.

கதிரையில் இருக்கப்போன கமராக்காரன் இந்தக் கதையோடு உசாரானான். வந்திருந்தவர்களில் உற வினர்களை தேடித் தேடி எடுத்தான்.

ஐயரின் வினோத விளையாட் டுக்களை ஒவ்வொரு கோணத்திலும் ஓடிஓடிச் சுட்டான். இத் தனைக்கும் நடுவில், இறந்தவரின் மனைவி இராசம்மா அக்கா அழுது களைத்து மயங்கிப்போய் யாரோ ஒருவரின் மடியில் கிடந்தார்.

அவருக்கு ஒருத்தி தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தார். இன் னொருத்தி கிழிந்த காட்போட் மட்டை யால் விசிறிக் கொண்டிருந்தார்.

வாமன் இவற்றையெல்லாம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டி ருந்தான். கமராக்காரனும் தனக்குக் கிடைத்த வாய்ப்பை விடக்கூடாது என்பது போல நெஞ்சில் தொங்கிய

கமராவை இறுகப்பிடித்துக் கொண்டு "உந்த அம்மாவை ஒருக்கால் அழச் சொல்லிறியளோ?" என்று கெஞ்சுத லோடு கேட்டான்.

"என்ன தம்பி அவ அழுது களைச்சுப் போயல்லே கிடக்கிறா எப்பிடி அழச்சொல்லுறது'' இது அருகில் இருந்த அம்மா ஒருவரின் பதில். இருந்தாலும் கமராக்காரன் விடுவதாயில்லை. "பிரச்சினை யில்லை அம்மாவை ஒருக்கால் எழுப்பி விடுங்கோ பிளீஸ்." என்று கெஞ்சினான்.

இராசம்மா அக்காவை மடி யில் வைத்திருந்த பெண் மெதுவாகக் காதுக்குள் கிசுகிசுத்தாள். "அக்கா! உங்களை ஒருக்கால் அழட்டாம். வெளியில நிக்கிற பொடியனுக்கு அனுப்ப படமெடுக்கப் போகினமாம்."

இராசம்மா அக்கா மூக்கைத் துடைத்துக் கொண்டு மெதுவாக உடம்பை அசைத்து எழும்பினார். அத்தான் படுத்திருந்த பெட்டியை தடவித் தடவி முன்னுக்கு வந்தவர், பெட்டியைத் தொட்டபடி கமராத் தம்பியைப் பார்த்து

"அழட்டோ தம்பி'' என்று கேட்டு முடிப்பதற்குள் கமரா சுடுசுடு வென்று சுட்டுத்தள்ளியது.

வாமன் ஏங்கிப் போயிருந் தான். சாவீட்டில் நடக்கும் சம்பவமா இது? சாவீட்டில் செத்தவர் செத்துப் போக இருப்பவர்களில் எத்தனை பேர் சாகப் போகிறோமோ என்று பயப்படக் கூடிய சூழலில் '

'எங்கே குண்டு விழும்? எங்கே கட்டடம் இடியும்? எத்தனை பேர் அதற்குள் நெரியுண்டு இறந்து போவார்கள் என்று இனந்தெரியாத பயப்பிராந் தியோடு வாழக்கூடிய சூழலில்'' இது என்ன சம்பிரதாயமா? இல்லை சடங்கா? வானத்தின் எங்கோ ஒரு மூலையில் மெல்லிய உறுமல் சத்தம்'' தூரத்தில் இருந்து வந்தவர் களிடம் அவர்களையுமறியாத அவசரம் காணப்பட்டது.

இருவர் பேசிக்கொண்டனர். "என்னய்யா? ஏதோ வித்தியாசமான சத்தம்'' "ஓம்பாருங்கோ கடற்கரைப் பக்கத்தாலை பொம்பர் போகுது."

''முந்தநாளும் அறுந்து போவான் மந்திகைக்குப் பக்கத்தில தோட்டத்துக்க தள்ளிப் போட்டுப் போயிட்டான். இண்டைக்கு என்ன நடக்குமோ ஆருக்குத் தெரியும்."

சாவீட்டுக்கு வந்தவர்களில் பல பேரை திடீரென்று காணவில்லை. ஐயரின் கையிலிருந்த மணியும் நடுங்கி நடுங்கி ஒலியை விழுங்கிக் கொண் டிருந்தது. குழந்தைக்கு மருந்து எடுக்க வேண்டுமென்று ஆரபி சொன்னது ஞாபகம் வந்தது வாமனுக்குநால்வ ருடன் இறந்தவர் கிடந்த பெட்டி உயர்ந்தது. துணைக்கு மூவர், கத்தி, கோடரியுடன்.

மீண்டும் உறுமல் சத்தம் கேட்கும் என்ற நம்பிக்கையுடன் நின்ற ரவியின் தோள்களில் வாமனின் கைகள்

"மச்சான் தூரம் போகவேணும் வரட்டே''

வந்த வேகத்தை விடவும் கூடிய வேகத்துடன் சுற்றத் தொடங்கின வாமனின் சைக்கிள் சில்லுகள்.

வாமனின் மனம்மட்டும் சாவீட்டுப் புதினங்களையெல்லாம் ஆருக்குச் சொல்லி அழலாம் என்று அங்கலாய்த்துக் கொண்டது.

**— மாவன்னா**

# கவனம் செலுத்துவாரா அரச அதிபர்?

யாழ் மாவட்டத்தில் அரச காணிகள் கூடுதலாக காணப்படுகின்ற இடம் வடமராட்சி கிழக்கு பிரதேசம். இங்கே வனஜீவராசிகள் திணைக் களத்தின் எல்லைகள் நாகர் கோயில் வரைக்கும் வந்து விட்டது. நாளுக்கு நாள் எல்லைகளுக்குள் சென்று மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்களும் காடுகளில் விறகு வெட்டுவதிலும் பல பிரச்சனைகளை இப்பகுதி மக்கள் சந்தித்து வருகின்றனர். இதற்கான கூட் டங்கள் வடமராட்சி கிழக்கில் நடை பெற்ற போதும் தீர்வுகள் எட்டப்படாத நிலை தொடர்கின்றது. J/429 கிராம மாகிய வத்திராயனை தவிர வடமராட் சிக் கிழக்கில் எல்லா கிராமங்களிலும் அரச காணிகள் காணப்படுகின்றது. இந்த காணிகளால் தான் நாளுக்கு நாள் பிரச்சனைகள் அதிகரித்துக்கொண்டு வருகின்றது.

கடந்த சில மாதமாக கடற் கரையில் உள்ள அரச காணிகள் தென் இலங்கையில் உள்ள மீனவர்கள் அத் துமீறி குடியிருந்து சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை யாவரும் அறிந்ததே. கடல் அட்டை பிடிப்பவர்களும் இந்த இடங்களிலே தங்கியிருக்கின்றனர். இந்த நிலையில் வடமராட்சி கிழக்கில் உள்ள மக்கள்



மீள்குடியேற்றப்பட்டு எட்டு வருடங்கள் கடந்த நிலையில் இவர்களில் சில ருக்கு இன்று அரசகாணிகள் பகிர்ந் தளிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருப்பவர்கள் யார்? என்று பார்த்தால் இப்பகுதியில் இருந்து புதிதாக கிராமசேவகர்களாக நியமிக் கப்பட்டவர்களின் பெயர்களே அதிக மாக பேசப்படுகின்றது. ஒவ்வொரு கிராமங்களிலும் இவர்களின் செயற் பாடுகளும் சட்டதிட்டங்களும் ஒவ் வொரு மாதிரியாகவுள்ளதாகவும் பக்கசார்பான செயற்பாடுகள், மக்களை மதிப்பதில்லை, குற்றசெயல்கள் ஈடுபடுபவர்களிடம் நெருக்கிய தொடர்பு, கிழமையில் இரண்டு நாட்கள் மட்டுமே இவர்களை சந்திக்க முடியும் என்றும், அந்த இரண்டு நாட்களிளும் 10 தொடக்கம் 2 மணி வரைக்கும் தான் அலுவலகத்தில் சந்திக்கலாம் என்றும், அவசர தேவை கருதி வீட்டிற்கு போனாலும் அலுவல கத்தில் தான் எங்களை சந்திக்கலாம் இதுதான் சட்டம் என கோபமாக பதிலளிப்பதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வேறு பிரதேசத்தில் உள்ளவர் களுக்கும் வேறு மாவட்டத்திலுள்ளவர் களுக்கும் காணிகள் வழங்கப்பட்ட தையும் பிரதேச செயலகம் மனிதாபி மான நோக்குடன் வழங்கியிருந்தா லும், இந்த கிராம சேவகர்களே சிபார் சும் செய்திருக்கின்றனர். இதைப்பற்றி தாங்கள் சுட்டிக்காட்டிய போது அவர் களுக்கு திறமை இருக்கிறது அதனால் தான் அங்கே இருந்து கொண்டு இங்கே காணி எடுக்கிறார்கள் என ஒரு கிராம சேவகர் கூறியதையும் மக்கள் சுட்டிக் கூறியுள்ளனர். வடமராட்சி கிழக் கில் 1991 ஆம் ஆண்டு இராணுவம் தரையிறக்கப்பட்டதை தொடர்ந்து சுனாமி உட்பட பல அழிவுகளை சந் தித்த ஒரு குடும்பத்திற்கு காணி வழங் கப்படுவதற்கு கிராமசேவகர் பெரிய பிரச்சினைகளை கொடுப்பதாக அப்ப குதி மக்களின் முறைப்பாட்டினை கேட்ட பிரதேசசபை தவிசாளர் இரண்டு மாதத்திற்கு முன்பு இந்த குடும்பத் தலைவருடன் பிரதேச செயலரிடம் சென்று முறைப்பாட்டை செய்த போது பிரதேச செயலரும் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு காணி வழங்க சம்மதம் தெரி வித்து காணி வழங்குவதற்கு பொறுப் பாக நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் வழங்குவதற்கு சிபார்சினை செய்து இவருக்கு 4 பரப்பு காணி வழங்கு வதற்கு அளந்து கொடுங்கள் என்று காணி கிளைக்கு அனுமதி வழங்கிய போது காணிக்கிளையும் அதனை ஏற்றுக் கொண்டது.

மறுநாள் கிராம சேவகர் தனது அலுவலகத்திற்குள் பாதிக்கப்பட்ட

நபரை அழைத்து என்னை அறியாமல் எனது கிராமத்தில் உங்களுக்கு காணி வழங்கினால் D.S தன்னுடைய வேலையை விட்டுவிட்டு போக வேண்டிவரும். நான் இருக்கும் வரைக்கும் எனது பிரிவில் என்னுடைய அனும தியை பெறாமல் அவர் யாருக்கும் காணி வழங்க முடியாது என உரக்க கூறிய போது மீண்டும் கடந்த 05.07.2017 பிரதேச செயலரை பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவர் சந்தித்து தனக்கு 2 பரப்பு காணியாவது தாருங்கள் நாங்கள் மனைவியின் அம்மா வீட்டில்தான் இருக்கிறோம் என மன்றாட்டமாக கேட்டபோது பிரதேச செயலர் உடனடியாக இவர்களுக்கான கிராமசேவகரை போனில் தொடர்பு கொண்டு ஏதோ உரையாடி விட்டு எங்களுக்கு எந்தப்பதிலும் தர வில்லையென பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர் கூறினார். இவ்விடயம் தொடர்பாக தகவல்களைப்பெற நாம் சம்மந்தப்பட்ட கிராமசேவகரை தொடர்பு கொண்டபோது பதில் ஏதும் வழங்காமல் தொடர்பை துண்டித்து விட்டார். இன்னும் அந்த குடும்பம் இருப்பிடத்திற்காக அலைந்து கொண்டே இருக்கின்றது. இத்தகைய வர்களுக்கான நீதி எமது அரச அலுவலர்களால் பெற்றுக்கொள்ளப்படுமா? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் இருக்கிறது.



• கலை

# கோட்டை இல்லாத ராஜன்

அரசர்கள் சிற்றரசர்கள் வாழ்ந்த இடங்களில் கோட்டைகளும் கட்டடங்களும் எச்சங்களாக இருக்கின்ற பொழுதிலும் கோட்டை இருந்ததற்கான எந்த தடயமும் இல்லாத போதும் அரசனாக இந்த ராஜன் மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்கள் மனங்களில் பல கோட்டைகளைக் கட்டிவிட்டிருக்கிறான் என்றபடியால் தான் அவன் இறந்தும் அவன் பெயரில் ஒரு கிராமம் பேசப்படும் ஊர்களில் ஒன்றாக வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறது.



“எனக்குத் தெரிந்த காலத்தில் பள்ளிக்கூடம் படிக்கப்போகும் போது கால்நடையாகக் காட்டுவழியே செல்வோம். இந்தக் காட்டுவழி எல்லாம் நிறைய தென்னைகள் நின்றன. இன்றும் ஒன்று இரண்டு தென்னைகள் நிற்கின்றன. இந்த காட்டுக்குள் இரண்டு குளங்கள் இருந்தது. மாரி காலத்தில் இரண்டும் ஒன்றாக சேர்ந்து விடும். கோடைக்கு இரண்டு குளமாக இருக்கும். இந்தக் குளத்தில் தண்ணீர் எடுத்து வந்து தென்னைகளுக்கு ஊற்றுவார்களாம். இங்கே உள்ள தென்னையின் வருமானத்தை ராசன் என்ற ஒரு முதலாளி வாங்கி கொழும்புக்கு இந்தியா உட்பட வேறு நாடுகளுக்கு அனுப்புவார். அவர் பெரிய தென்னந் தோட்டங்களை வைத்திருந்தவர். அது மட்டுமல்லாமல் பக்கத்து கிராமத்தில் உள்ள தேங்காய்களையும் வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார். ராசன் பெரிய வத்தை வச்சிருந்தவர். வத்தை என்றால் வள்ளங்களை விட பெரியது. இந்த வத்தையில் தான் ஒரே தடவையில் நிறைய சாமான்களை அனுப்பி தேவையான வேறு பொருட் களை வேறு நாடுகளில் இருந்து கொண்டு வருவார். இவர் ஒரு சிற்றரசர். திருவனந்தபுரம், தூத்துக்குடி, கொழும்பு, காலி, மாத்தறை போன்ற

இடங்களுக்கு கப்பல் மூலமாக சாமான்களை அனுப்புவர். இந்த ராசனை தேடிவருகின்றவர்கள் இவர் ஒரு சிற்றரசர் என்பதால் ராசனிடம் போகிறோம். அந்த வத்தை வைத்திருக்கின்ற ராசனிடம் போகிறோம். அப்பிடி வத்தை ராசனிடம் போகிறோம் என்று சொல்லிச் சொல்லி வந்து தான் இந்த ஊருக்கு வத்திராயன் என்ற பெயர் வந்தது. அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று தெரியாது. இவருடைய பரம்பரைதான் கூடுதலாக இந்த ஊரில் இருக்கின்றார்கள். பரவலாகக் குடியேறிக்கொண்ட மக்களாக இருந்தாலும் அவர்களின் பரம்பரை இருந்தது. என்பதற்கு உதாரணம். கூடுதலாக வத்திராயனில் உள்ளவர்களுக்கு ராஜன் ராசன் என்ற பெயர் வருவதுண்டு.

இதில் சில பேருக்கு பெயர்களுக்கு முன்னுக்கு ராசதுரை தெய்வராசா, முத்துராசா, சின்னராசன், பெரியராசன், ராசபாக்கியம் இப்படி ராசராசன் என்ற பெயரும் சேர்ந்து வருவதுண்டு. வத்திராயனில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தில் ஒருவருக்கு என்றாலும் ராசா, ராசன் என்ற பெயர் சேர்ந்து வந்திருக்கும். இதனால் சந்ததிப் பெயர்கள் வழியாக வருகிறது என்பது தெரிகின்றது.

அந்த காலத்தில் கோயில்கள் இல்லை. வெள்ளைக்காரனுக்கு பயந்து வீடுகளில் பூசப்பேத்தி என்ற கோயில் தான் ஒவ்வொருவரும் வைத்திருந்தார்கள். முன்னர் பெரிய கோயில்கள் இருந்து அழிந்திருக்கலாம் என்று நினைக்கின்றேன். வத்திராயனில் பூசப்பேத்தி பல வீடுகளில் உண்டு. ஒவ்வொரு வீட்டாருக்கும் ஒவ்வொரு பூசப்பேத்தி. வெள்ளக்காரனுக்கு பயந்து சிறு குடிசை அமைத்து அதற்குள் ஒரு நெல்லுப்பானை வைத்து நெல்லுப் பானைக்குள் தங்களுடைய தெய்வங்களை மறைத்து வைத்திருப்பார்கள். உருவங்களை தகடுகளை

---

**றேடியோவில் செய்திகளைக் கேட்பதற்கு இந்திய அலை வரிசைதான் அந்தக் காலங்களில் கூடுதலாக இருந்தது. அதிலும் இலங்கை செய்தியில் முதல் நாள் நடந்தவற்றை மறுநாள் தான் கேட்க முடியும். இப்படியான காலத்தில் சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு முன்பாக நடேசு யோகேஸ்வரன் (சிங்கன்) ஒரு கரும்பலகையை வைத்து உறுமல் என்ற தலைப்பை இட்டு விறு விறுப்பான புதிய செய்திகளை பதிவிடுவார்.**

---

களைதான் தெய்வமாக இந்த பானைக் குள் வைப்பார்கள். இந்த நெல்லுப் பானைதான் பூசப்பேத்தி. தற்செயலாக வெள்ளைக்காரன் வந்து பார்த்தால் நெல்லுப்பானையாகதான் தெரியும். இவைகள் தான் பிறகு அம்மன் கோயி லாகவும் வைரவர் கோயிலாகவும் முருகன் கோயிலாகவும் வந்தன.

கதிர்காமத்துக்குப் போய்வரு கிறவர்கள் வேல் கொண்டுதான் முருகன் கோயிலுக்குப் போவார்கள். பிள்ளையான்குட்டி அப்பா என்று ஒருவர் இருந்தவர். அவர் தான் முருகன் கோயில் என்று ஆரம்பிக்கத் தொடங்கியவர். பிறகு நானும் அவருடன் சேர்ந்து 1985ம் ஆண்டில் அவர் தந்த காணிக்குள்ள சிறீமுருகன் என்ற கோயிலை ஆரம்பித்தோம். அதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு என்னுடைய காணிக்குள்ள நான் ஒரு முருகன் கோயிலை ஆரம்பித்தேன்" என சோதிடர் ஸ்ரீகந்தசாமி கூறினார்.

பிறகு இந்த மக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பொதுக் கோயில் வேண்டும் என்று கேட்டபடியால் பிள்ளையான்குட்டி அப்பா அன்ப ளிப்பாக தந்த காணிக்குள் ஊர் மக்கள் எல்லாம் சேர்ந்து அவரவரே காட்டுக் குள் போய் தடிகளை வெட்டிக் கொண்டு வந்து அவரவரே காசுகளை செலவழித்துதான் அந்த முருகன் கோயில் ஆரம்பித்தார்கள். இந்த காலப்பகுதியில் சீமேந்து தட்டுப்பாடாக இருந்ததுடன் இதற்கான நிதியும் வழங்குவதற்கு பெரியவசதி படைத்த வர்கள் என்று சொல்லுமளவிற்கு யாரும் இருக்கவில்லை. இது யுத்த காலம் எப்பதனால் நாளாந்தம் கடற்றொழிலில் ஈடுபட்டு கிடைக்கின்ற சிறிய வருமானத்தை வைத்து தமது அன்றாட வாழ்க்கைச் செலவினை ஓட்டிக்கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது ஒரு சாப்பாடு கிடைக்கும். ஆனால் கலகலப்புக்கு பஞ்சமில்லை. இங்கே விளையாட்டுக்கள், நாடகங்கள், பாட்டுக் கச்சேரிகள் என பல வகையான பொழுது போக்குகள் நிறைந்திருப்பதால் சந்தோசமான ஒரு வாழ்க்கை முறையே காணப்பட்டது. இந்த நேரம் எனக்கும் நினைவிருக் கிறது. ஸ்ரீகந்தசாமியின் ஒரு நாவல் மரத்திற்கு பக்கத்தில் அவருடைய காணியின் ஒரு மூலையில் சிறிய குடிசை ஒன்று அமைத்து முருகன் கோவில் ஒன்றை ஆரம்பித்தார்.

பின்பு மக்களின் பங்களிப்புடன் ஆரம் பிக்கப்பட்ட போது 1985 இல் கும்பா பிஷேகம் அன்று கிறிஸ்ரி என்னும் ஆசிரியர் வீட்டில் நடக்கும்

ஆங்கில வகுப்பை நிறுத்தி விட்டு நானும் கலந்து கொண்டதை மறக்க முடியாது. வத்திராயனில் முதல் முதல் ஆரம் பிக்கப்பட்ட பொதுக் கோயில் இது தான். இன்றும் வத்திராயனில் பொது கோயில்களின் வரிசையில் முன்னிலையில் நிற்கும் இந்தக் கோயில் மன அமைதியைத் தேடும் இடமாக, யாருக்கும் இடையூறும் இல்லாமல் இயற்கை மரங்கள் சூழ்ந்திருக்க அமைந் துள்ளது.

## இரட்டாங்காலி நீச்சல் தடாகம்

நாவல்ப்பழ சீசனுக்கும் ஈச் சம்பழ சீசனுக்கும் சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் நான், ஈஸ்வரன், புரட்சி, கனியன் ஆகியோரும் இங் குள்ள பழங்களை சாப்பிடுவதற்கு காலையில் காட்டை நோக்கி வெளிக் கிட்டு பழங்களை ஆய்ந்து சாப்பிட்டுக் கொண்டு இரட்டாங் காலி வரைக்கும் போவோம். அங்கு மர நிழல்களில் இருந்து களைப்பாறிவிட்டு இரட்டாங் காலி குளத்திற்கு பக்கத்தில் உள்ள மணலில் கிணறு கிண்டி (கிடங்கு கிண்டி) சித்திரப்பாலாவி கொடி எடுத்து இதன் பாலை அந்த கிணற்று தண்ணி ருக்குள் விட்டவுடன் இத்தண்ணீர் தெளிந்து சுத்தமான தண்ணீராக வரும். அதற்கு பிறகு எல்லோரும் இந்த தண் ணீரை குடிப்போம்.

நேரம் ஒரு 11 மணி வரைக் கும் இரட்டாங்காலியில் குளித்துவிட்டு தண்ணீா தாகம் எடுத்தால் மீண்டும் இக் கிடங்கு தண்ணீரை குடித்துவிட்டு வீடு திரும்புவோம். இப்படி ஈச்சம் வட்டு தறிப்பதற்கும் காட்டிற்குப் போவோம். ஈச்சம் வட்டிற்கு போவது என்றால் காந்தகரன் தங்களுடைய வீட்டில் உள்ள கத்தி, கோடரி எல்லாம் கொண்டு வருவான். காரணம் என்ன வென்றால் ஈச்சம் வட்டு தறிப்பதற்கு கூரான கோடாரியும் பிளப்பதற்கு பெரிய கத்தியும் தேவை. காந்தகரனின் அப்பா ஒரு கரைவலை சம்மாட்டி. அதனால் அவர்களுடைய வீட்டில் இந்த ஆயுதங்கள் இருப்பதால் நாங்களும் ஈச்சம் வட்டுக்கு போகும் போது காந்த கரனை விட்டு விட்டுப் போவதில்லை.

இப்பகுதியில் முதல் இந்துப் பாடசாலைகள் இருக்கவில்லை. இ.த.க றோமன் பாடசாலைகள்தான் இருந்தன. சண்முக வித்தியாலயம் என்று கூறி வத்திராயன் தெற்கில் இருந்த பள்ளிக் கூடத்தை இந்து தமிழ் கலவன் பாடசாலை என்று மாற்றினார்கள். நாங்கள் படிக்கும்போது சண்முக வித்தியாலயம் என்றுதான் இருந்தது. நாங்கள் படித்து முடித்து வெளியில் வந்த பிறகு தான் இந்து தமிழ் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது. இதனை சைவப்பள்ளிக்கூடம் என்றும்

சொல்லுவார்கள். ஏனெனில் வேறு இந்துப் பள்ளிக்கூடம் ஒன்றும் அங்கு இருக்கவில்லை.

"சுப்பையாப்பா, செல்லத்துரையப்பா இவர்களெல்லாம் சேர்ந்து வத்திராயன் வடக்கில் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்தார்கள். கடற்கரை ஆட்கள் தரவை ஆட்கள் என்ற பிரச்சனை வந்து ஆட்களுக்கு ஆட்கள் சண்டையிட்டதினால் கடற்கரை ஆட்களுக்காக இந்த பாடசாலையை இவர்கள் எல்லாம் சேர்ந்து ஆரம்பித்து வைத்தார்கள்." என சில பெரியவர்கள் கூறுகின்றனர். ஐயாவும் வைரவப்பிள்ளை அண்ணனும் இந்த காணியை பள்ளிக்கூடத்திற்கு அன்பளிப்பு செய்தார்கள்.

கரவெட்டியில் இருந்து 3, 4 மாஸ்டர்களும் தெல்லிப்பளையில் இருந்து 2 ரீச்சர்களும் (செல்லப்பாக்கியம், சிவபாக்கியம்) வந்து இங்குள்ள வீடுகளில் தங்கி நின்று இந்த பள்ளிக்கூடத்தில் படிப்பித்தார்கள். கரவெட்டி ஆட்கள் 4 பேர் படிப்பித்தார்கள். கனகசபை, தனபாலசிங்கம், விநாயக மூர்த்தி, பொன்னையா இதில் பொன்னையா என்பவர் தேசிய சேமிப்பு வங்கியில் மனேச்சசராக இருந்தவர். இப்பொழுது பென்சன் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். என்னுடன் கதைத்த போது யாழ்ப்பாணத்தில் வேலை செய்தவர். அவரிடம் நான் படித்தனான். அவர் கரவெட்டியைச் சேர்ந்த ஒருவர்" என நற்குணம் கூறினார். எங்களுடைய ஆட்களிடம் போதுமான அளவு பணம் இருந்தது. இவர்கள் பதிவு செய்யாத படியால் தொடர்ந்து நடத்த முடியவில்லை. எங்களுடைய வாசிகசாலைக்குப் பெரிய வரலாறு இருக்கிறது. எங்களுடைய காலத்தில் இருந்தவர்களுக்கு முற்பட்ட ஆக்களுக்கு முற்பட்ட ஆக்கள் கணேசபிள்ளை, சம்மாட்டி, கணபதிப்பு இவர்களெல்லாம் நிர்வாகத்தில் இருந்தவர்கள். ஆனால் அதற்கு முன்பு ஒரு நிர்வாகம் இருந்தது. நான் அறிந்தவரை இந்த வாசிகசாலை தான் வடமராட்சி கிழக்கில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட வாசிகசாலை என்று நினைக்கிறேன்" என சில பெரியவர்கள் கூறினார்.

அப்போது சரஸ்வதி சனசமூகம் என்று தான் இருந்தது. உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்து வைத்தது நாங்கள் தான். அதற்கு முன்பு சண்முக விளையாட்டுக் கழகம் என்று தான் இருந்தது. ஆனால் பதிவு செய்யப்படவில்லை. 68,69 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்தது. பின்னர் 70 களில் பதிவு செய்யப்பட்டது. நற்குணம் லோகன் வேலுமயில் நல்லண்ணா போன்றோர் இந்த காலப்

பகுதிகளில் நிர்வாகத்தில் இருந்த வர்கள். முதல் முதல் வள்ளம் வைச்சிருந்தது ஐயாவும் கண்ணப்பு அப்புவும் தான். அதேமாதிரி கார் எடுத்தது வத்திராயனில் வேலும் மயிலும் மருதங்கேணியில் சிவலிங் கமும் தான் என்று சிலர் கூறுவர்.

1948 ஆம் ஆண்டு ஆங்கி லேயர் வெளியேறிய பின்பு இப்ப குதியில் உள்ள காணிகளை பல கமத் தொழிலாளர்கள் சங்கங்களுக்கு எழுதி யிருந்ததாக கணபதிப்பிள்ளை சத்திய பாமா என்பவரின் தாய் உறுதியில் காட்டப்பட்டுள்ளது. அந்த உறுதியில் கஜு மரங்கள் நின்றதாகவும் காட்டப் பட்டுள்ளது. காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை சத்தியபாமாவுடனான உரை யாடலின் போது தான் திருமணம் செய்த காலப்பகுதியில் தனது கணவ னுடன் சென்று தமது காணியில் இருந்த கஜு மரங்களின் கீழ் இருந்து பழங்கள் சாப்பிட்டதாக கூறினார்.

இந்த காணிகளை புலோலி கமத்தொழிலாளர் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு குறைந்த பெறுமதியில் விற்று சங்க வளர்ச்சிக்கு அப்பணத்தை பெற்றுள்ளது. நாட்டில் ஏற்பட்ட கலவரங்களின் போது கிராம புறங்களில் போய் தங்குவதற்காகவே தாங்கள் இந்த காணிகளை வாங்கிய தாக மேற்படி நபர் கூறினார். அதே நேரம் இப்பகுதி காணிகளில் எல்லா இடங்களிலும் பரவலாக தென்னைகள் நின்றதாக மூதாதையர் கூறுகின்றனர்.

தாங்கள் பாடசாலைக்கு போகும் வழிகளில் எல்லாம் தென்னை மரங்கள் பட்டுப்போய் அடிக்குற்றிகள் பரவலாக இருந்ததை நாங்களும் காணக்கூடியதாக இருந்தது. தங்களு டைய காலத்தில் இரட்டாங்காலி குளத்துக்கு அருகில் கூடுதலான தென்னை மரங்கள் நின்றதாகவும் தான் குளிக்கும் போது இத் தென்னை மரங்களின் கீழ் தனது கைப்பையை வைத்து விட்டு குளித்த ஞாபகம் இருப் பதாக எனது அம்மா கூறுகின்றார்.

அவ் இடத்தில் நில மட்டத்தில் இருந்து நீர் அண்மையில் இருந்ததால் இப் பிரதேசம் பள்ளமான நிலப்பகுதி யினை கொண்டமையினால் பராமரிப் புக்கு ஆட்கள் இல்லாவிட்டாலும் தென்னை மரங்கள் நீண்ட காலம் நின்ற தாக கருதப்படுகின்றது. 1300 ஆம் ஆண்டுகளுக்கு முதல் ஆங்கிலேய நாட்டவர்களின் படையெடுப்புக்கு முன் பான காலப்பகுதியாக கருதப்படும் காலப் பகுதியில் இப்பகுதியில் உள்ள தென்னந் தோட்டங்களுக்கு முதலாளி யாக ராஜன் எனும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஒருவர் இக்கிராமத்தை ஆட்சி

செய்து வந்ததாகவும் அவர் வத்தைகளில் இத் தோட்டத்தில் இருந்து எடுக்கும் தேங்காய்களை இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக வத்தைகளில் அனுப்பி வைத்ததாகவும் சோதிட வைத்தியர் ஸ்ரீகந்தசாமி கூறுவதை நற்குணமும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பருத்தித்துறை,பளை மற்றும் பல இடங்களில் இருந்து கால் நடையாகவும் மாட்டுவண்டியாகவும் இவ் இடத்திலுள்ள தென்னந்தோட்ட முதலாளி ராஜனை சந்திக்க வருபவர்கள் வத்தை வைத்திருக்கும் ராஜனிடம் போகிறோம் என்று கூறியதனால் வத்திராயன் என பெயர் வரக்காரணம் உறுதியாகின்றது.

ஆரம்பகாலங்களில் மக்கள் கடற்கரையோரங்களில் வாழ்வதற்கு இயற்கையின் தாக்கம் அவர்களை பயமுறுத்தியது. புயல் கடல் கொந்தளிப்பு சூறாவளிக்காற்று என்பவற்றின் தாக்கத்திற்கும் பாதிப்பிற்கும் அஞ்சி கரையோரத்திலிருந்து விலகி காரையம் பதி எனும் உட்பகுதி கிராமத்தில் வாழ்ந்தனர். பிற்காலத்தில் இந்த வத்தைகளின் வரவு காரணமாக மக்கள் தொழில் வாய்ப்புத்தேடி திரும்ப கரையோரங்களை நாடி வரவேண்டிய நிலை ஏற்பட்டது. அதுவரை மக்கள் முழுமையாக விவசாயத் தொழிலையே செய்து கொண்டு விவசாய குடும்பங்களாகவே இருந்து வந்தனர். அன்னியர்களின் தலையீட்டினாலும் படை யெடுப்புக்களினாலும் மக்களின் விவ சாயம் பாதிக்கப்பட்டது. விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டன. விவசாயிகளின் நிலை மிக வறுமை நிலையினை அடைந்தது.

இதனால் அந்நியர்களின் கீழ் கூலி வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்காகவே காரயம்பதி கிராமத்தில் இருந்த விவசாயிகள் கரையோரம் வந்து வத்தைகளில் வேலை செய்து கொண்டனர். வத்தைகள் அதாவது பாய்வள்ளங்கள், இயந்திரம் இல்லாத பாய்க்கப்பல்கள், காற்றை நம்பி பயணிக்கும் மரக்கலங்கள்.

இவைகளை ஓட்டுதல் அயல் நாடுகளுக்கு ஓட்டிச் செல்லுதல் பர்மா, ரங்கூன், இந்தியா, வங்காளம் போன்ற நாடுகளுக்கு இங்குள்ள பொருட்களை ஏற்றிச்செல்லுதல், அங்கிருந்து நெல் பிற தானியங்கள் என்பனவற்றை எடுத்து வருதல் இங்கு ஏற்றி இறக்குதல் வேலைகளும் நம்மவர்களினாலேயே மேற்கொள்ளப்பட்டது. சிறிது சிறிதாக கடலுக்கு பழக்கப்பட்ட மக்கள் பிற நாட்டவர்களின் கூலியை நம்பி இராமல் தங்கள் காலில் நிற்க

துணிந்து தாமாகவே கடலுக்கு சென்று மீன் பிடித்து மற்றைய மக்களின் தேவை களையும் பூர்த்தி செய்யத் தொடங்கினர். இது வளர்ந்து வீச்சுவலை, கட்டுமரத்தொழில் கரைவலைத்தொழில், இஞ்சின் மரம், பைவர்கிளாஸ் சிறிய போட், பைவர்கிளாஸ், பெரிய போட் இன்று உலக கடல் தொழில் வளங்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் பல நாட்கள் வரை வைத்து தொழில் செய்ய கூடியதாக வளர்ந்துள்ளனர்.

பனை வளம் கொண்ட எம் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான பனைகள் இருந்தன. நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு, ஓலை, பனைமரம் என்பன கிடைக்கின்றன.

எமது பிரதேசத்தில் சீவல் தொழிலாளிகள் இல்லை. கால ஓட்டத்தின் பின்னர் அயல் கிராமங்களில் மருதங்கேணி, உடுத்துறை, ஆழிய வளை, மாமுனை ஆகிய கிராமங்களில் கொடிகாமம், வரணி, புலோலி ஆகிய பகுதிகளில் இருந்து சீவல் தொழிலாளிகள் தொழில் நிமித்தமாக வந்து, கள் எடுத்தல், பதனீர் எடுத்தல் என்பன செய்தனர். இதற்கு குடிசை அமைத்து அதாவது கள்ளுக்கொட்டில் அமைத்து தொழில் செய்தனர். எமது கிராமத்தவர்களில் "கள்" அருந்துவது அதிகமானவர்களின் பழக்கமாக இருந்ததுள்ளது. ஆனால் அன்று தொடக்கம் இன்று வரை ஒரு கள்ளுக்கொட்டிலோ அல்லது தற்போதைய கோப்பிறேசனோ வத்திராயன் கிராமத்தில் இருந்ததில்லை.

அந்தச் காலத்தில் எமது பகுதி கைத்தொழில் வளர்ச்சி உள்ள ஒரு கிராமமாக திகழ்ந்தது. 1970 களில் பிரபலமான கைத்தறி நெசவு நிலையம் ஒன்று இருந்தது. முப்பது நாற்பது பெண் பிள்ளைகள் வேலை செய்யக் கூடிய தொழில்சாலையாக இருந்தது. மிக உன்னதமாக நடைபெற்று வந்தது. பிற இடங்களுக்கு கூட சாரம் கைத்தறி புடைவைகள் சாறிகள் என்பன விற்பனைக்கு அனுப்பப்பட்டது. இன்று அது காலத்தின் சூழலினால் அழிந்து பாழடைந்த கட்டிடமாக இருக்கின்றது என சில பெரியவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளக்கூடிய தடயங்கள் இப்பொழுதும் காணப்படு கின்றன.

பத்திரிகை என்றால் நான் அறிந்த அளவில் ஈழநாடுதான் கிடைக்கும். முதல் நாள் பத்திரிகைதான் அடுத்த நாள் கிடைக்கும். புதுக்காட்டுச் சந்தியில் அல்லது பருத்தித்துறையில் இருந்து வருபவர்கள்தான் இந்த பத்திரிகையை எடுத்துவர வேண்டும். ஏனெனில் புத்தகசாலை எதுவும் எமது

இடத்தில் இல்லை. செய்திகளை அறிவதற்கு காந்தன் சம்மாட்டி வீட்டில் தான் ஒரு தொலைக்காட்சி இருந்தது. ஏதாவது பிரச்சனைகள் என்றால் தொலைக்காட்சியை பார்ப்பதற்கு சம்மாட்டி வீட்டிற்குத்தான் போக வேண்டும். றேடியோவில் செய்திகளை கேட்பதற்கு இந்திய அலை வரிசைதான் அந்தக்காலங்களில் கூடுதலாக இருந்தது. அதிலும் இலங்கைச்செய்தியில் முதல் நாள் நடந்தவற்றை மறுநாள்தான் கேட்க முடியும். இப்படியான காலத்தில் சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு முன்பாக நடேசு யோகேஸ்வரன் (சிங்கன்) ஒரு கரும்பலகையை வைத்து உறுமல் என்ற தலைப்பை இட்டு விறுவிறுப்பான புதிய செய்திகளை பதிவிடுவார்.

இந்தச்செய்திகள் எப்படி இவருக்கு கிடைக்கிறதோ என்று தெரியவில்லை. இவர் சிங்கன் தானே. சீறிக்கொண்டே செய்திகளை கொண்டு வருவார். (ராஜன் வருவான்)

■ ஏ.சசி

---

# கபடம்



உலகத்தின்
மிகச் சிறந்த
புன்னகையை வீசுகிறாய்
மீளவும் மீளவும்
உன்னை வாசிக்கிற
பொழுதுதான்
கருத்தவிழ்ப்பு செய்கின்றாய்

ஆயிரம் ஆயிரம்
மர்மங்களை
ஒளித்து வைத்துக்
கொள்கிறாய் உன்னுள்ளே
மிகச்சிறந்த நாடகம்
பிரதி ஒன்றின்
குறியீடுகளாய்
உன்னை விரித்துக் கொள்கிறாய்

உன் மௌனத்திற்குள்
மறைந்து கொள்ளும்
மர்மங்களையும்
புன்னகைக்குள் புதைந்திருக்கும்
கபடங்களையும்
என்னால் மட்டுமே
புரிந்து கொள்ள முடியும்

ஏனெனில் உன் படிமங்கள்
அத்தனையையும்
அறிந்தவன்
நான் ஒருவனே

**தீபாஜி**

# பொன்னியின் செல்வன்

**வரலாற்றில் பேசப்படும் நாவல்களில் கல்கியின் பொன்னியின் செல்வனும் ஒன்று என்பதனை மறுக்கமுடியாது.**

ஆடித்திருநாள்

ஆதி அந்தமில்லாத கால வெள் ளத்தில் கற்பனை ஓடத்தில் ஏறி நம்முடன் சிறிது நேரம் பிரயாணம் செய்யுமாறு நேயர்களை அழைக்கிறோம். விநாடிக்கு ஒரு நூற்றாண்டு வீதம் எளிதில் கடந்து இன் றைக்குத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குச் செல்வோமாக.

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையில் உள்ள திருமுனைப் பாடி நாட்டின் தென்பகுதியில், தில்லைச் சிற்றம்பலத்துக்கு மேற்கே இரண்டு காததூரத்தில் அலை கடல் போன்ற ஓர் ஏரி விரிந்து பரந்து கிடக்கிறது. அதற்கு வீரநாராயண ஏரி என்று பெயர். அது தெற்கு வடக்கில் ஒன்றரைக்காத நீளமும் கிழக்கு மேற்கில் அரைக்காத அகலமும் உள்ளது. காலப் போக்கில் அதன் பெயர் சிதைந்து இந்நாளில் வீராணத்து ஏரி என்ற பெயரால் வழங்கி வருகிறது.

புது வெள்ளம் வந்து பாய்ந்து ஏரியில் நீர் நிரம்பித் ததும்பி நிற்கும் அடி ஆவணி மாதங்களில் வீரநாராயண ஏரியைப் பார்ப்பவர் எவரும் தம்முடைய பழந்தமிழ் நாட்டு முன்னோர்கள் தங்கள் காலத்தில் சாதித்த அரும் பெரும் காரியங்களைக் குறித்துப் பெருமிதமும் பெரு வியப்பும் கொள்ளாமலிருக்க முடியாது. நம் மூதாதையர்கள் தங்களுடைய நலனுக்கும் தங்கள் காலத்திய மக்களின் நலனுக்கும் உரிய காரியங்களை மட்டுமா செய்தார்கள்? தாய்த் திருநாட்டில் தங்களுக்குப் பிற்காலத்தில் வாழையடி வாழையாக வரப்போகும் ஆயிரங்கால சந்ததிகளுக்கும் நன்மை பயக்கும் மாபெரும் செயல்களை நிறைவேற்றி விட்டுப் போனார்கள் அல்லவா?

ஆடித் திங்கள் 18ம் நாள் முன் மாலை நேரத்தில் அலை கடல் போல் விரிந்து பரந்திருந்த வீர நாராயண ஏரிக்கரை மீது ஒரு வாலிபவீரன் குதிரை ஏறிப்பிரயாணம் செய்துகொண்டிருந்தான். அவன் தமிழகத்து வீர சரித்திரத்தில் புகழ்பெற்ற வாணர் குலத்தைச் சேர்ந்தவன். வல்லவரையன் வந்தியத்தேவன் என்பது அவன் பெயர். நெடுந்தூரம் பிரயாணம் செய்து அலுத்துக் களைத்திருந்த அவனுடைய குதிரை மெள்ள மெள்ள நடந்து சென்று கொண்டி ருந்தது. அதைப் பற்றி அந்த இளம்வீரன் கவலைப்படவில்லை. அகண்டமான அந்த

வீரநாராயண ஏரியின் தோற்றம் அவன் உள்ளத்தை அவ்வளவாக வசீகரித்திருந்தது.

ஆடி பதினெட்டாம் பெருக்கன்று சோழ நாட்டு நதிகளிலெல்லாம் வெள்ளம் இருகரையும் தொட்டுக் கொண்டு ஓடுவது வழக்கம். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக் கொண்டு அலை மோதிக் கொண்டிருப்பது வழக்கம். வட காவேரி என்று பக்தர்களாலும் கொள்ளிடம் என்று பொது மக்களாலும் வழங்கப்பட்ட நதியிலிருந்து வடவாற்றின் வழியாகத் தண்ணீர வந்து வீர நாராயண ஏரியில் பாய்ந்து அதை ஒரு பொங்கும் கடலாக ஆக்கியிருந்தது. அந்த ஏரியின் எழுபத்து நான்கு கணவாய்களின் வழியாகவும் தண்ணீர் குபுகுபுவென்று பாய்ந்து சுற்றுப் பக்கத்தில் நெடுந்தூரத்துக்கு நீர்வளத்தை அளித்துக் கொண்டிருந்தது. அந்த ஏரித்தண்ணீரைக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் களணிகளில் உழவும் விரை தெளியும் நடவும் நடந்து கொண்டிருந்தன. உழுது கொண்டிருந்த குடியானவர்களும் நடவு நட்டுக்கொண்டிருந்த குடியானைப் பெண்களும் இனிய இசைகளில் குதூகலமாக அங்கங்கே பாடிக்கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் கேட்டுக் கொண்டு வந்தியத்தேவன் களைத்திருந்த குதிரையை விரட்டாமல் மெதுவாகவே போய்க்கொண்டிருந்தான். ஏரிக்கரை மீது ஏறியதிலிருந்து அந்த ஏரிக்கு எழுபத்துநாலு கணவாய்கள் உண்டு என்று சொல்லப்படுவது உண்மை தானா என்று அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவன் கணவாய்களை எண்ணிக் கொண்டே வந்தான். ஏறக்குறைய ஒன்றரைக் காதுதூரம் அவன் அந்த மாபெரும் ஏரிக்கரையோடு வந்த பிறகு எழுபது கணவாய்களை எண்ணியிருந்தான்.

ஆகா! இது எவ்வளவு பிரம்மாண்டமான ஏரி? எத்தனை நீளம்? எத்தனை அகலம், தொண்டை நாட்டில் பல்லவப் பேரரசர்களின் காலத்தில் அமைத்த ஏரிகளையெல்லாம் இந்த ஏரிக்கு முன்னால் சிறிய குளங்குட்டைகள் என்றே சொல்லத் தோன்றும் அல்லவா? வட காவேரியில் வீணாகச் சென்று கடலில் விழும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்காக மதுரை கொண்ட பராந்தகரின் புதல்வர் இளவரசர் இராஜாதித்தர் இந்தக் கடல் போன்ற ஏரியை அமைக்க வேண்டுமென்று எண்ணினாரே? எண்ணி அதைச் செயலிலும் நிறைவேற்றினாரே? அவர் எப்பேர்ப்பட்ட அறிவாளியா யிருந்திருக்க வேண்டும்? வீர பௌருஷத் திலே தான் அவருக்கு இணை வேறு யார்? தக்கோலத்தில் நடந்த போரில் தாமே முன்னணியில் யானைமீது ஏறிச் சென்று போராடினார் அல்லவா? போராடிப் பகைவர்

களின் வேலை மார்பிலே தாங்கிக் கொண்டு உயிர்நீத்தார் அல்லவா? அத னால் யானை மேல் துஞ்சிய தேவர் எனப் பெயர்பெற்று வீர சொர்க்கம் அடைந்தார் அல்லவா?

இந்தச் சோழ குலத்து மன்னர் களே அதிசயமானவர்கள்தான்! அவர்கள் வீரத்தில் எப்படியோ அப்படியே அறத் திலும் மிக்கவர்கள். அறத்தில் எப்பயோ அப்படியே தெய்வபக்தியிலும் சிறந்த வர்கள். அத்தகைய சோழ குல மன்னர் களுடன் நட்புரியை கொள்ளும் பேறு தனக்குக் கிடைத்திருப்பது பற்றி நினைக்க நினைக்க வந்தியத் தேவனு டைய தோள்கள் பூரித்தன. மேற்குத் திசையிலிருந்து வீர்ரென்று அடித்த காற்றினால் வீர நாராயண ஏரித்தண்ணீர் அலைமோதிக் கொண்டு கரையைத் தாக் கியது போல் அவனுடைய உள்ளமும் பெருமிதத் தினால் பொங்கித் ததும்பிற்று.

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டு வீர நாராயண ஏரிக்கரையின் தென்கோடிக்கு வந்தியத்தேவன் வந்து சேர்ந்தான். அங்கே வட காவேரியிலி ருந்து பிரிந்து வந்தவடவாறு. ஏரியில் வந்து சேரும் காட்சயைக் கண்டான். ஏரிக்கரை யிலிருந்து சிறிது தூரம் வரை யில் ஏரியின் உட்புறம் படுகையாக அமைந்திருந்தது. வெள்ளம் வந்து மோதும்போது கரைக்குச் சேதம் உண்டாகாமல் இருக்கும் பொருட்டு அந்தப் படுகையில் கருவேல மரங்களை யும் விளாமரங்களையும் நட்டு வளர்த் திருந்தார்கள்.

கரையோரமாக நாணல் அடர்த் தியாக வளர்ந்திருந்தது. தென்மேற்குத் திசையிலிருந்து இருபுறமும் மர வரிசை யுடன் வடவாற்றின் வெள்ளம் வந்து ஏரியில் கலக்கும் காட்சி சற்றுத் தூரத் திலிருந்து பார்க்கும்போது அழகிய வர்ணக்கோலம் போட்டது போல் காணப் பட்டது.

இந்த மனோகரமான தோற்றத் தின் இனிமையையும் குதஸகலத்தையும் அதிகப்படுத்தும்படியான இன்னும் சில காட்சிகளை வந்தியத்தேவன் அங்கே கண்டான்.

அன்று பதினெட்டாம் பெருக்குத் திருநாள் அல்லவா? பக்கத்துக் கிராமங் களிலிருந்து தந்த நிறத் தென்னங் குருத் துகளால் சப்பரங்கள் கட்டி இழுத்துக் கொண்டு கும்பல் கும்பலாக மக்கள் அங்கே வந்துகொண்டிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சிலவயோதிபர்களும் கூடப் புதிய ஆடைகள் அணிந்து விதவிதமான அலங்காரங்கள் செய்து கொண்டு வந்திருந்தார்கள்.

பெண்களின் கூந்தல்களைத் தாழம்பூ, செவ்வந்திப்பூ, மல்லிகை, முல்லை, இருவாட்சி செண்பகம் முதலிய மலர்கள் கொத்துக் கொத்தாய் அலங்கரித்தன. கூட்டாஞ் சோறும், சித்தி ரான்னமும் எடுத்துக் கொண்டு பலர் குடும்பம் குடும்பமாக வந்திருந்தார்கள். சிலர் ஏரிக்கரையில் தண்ணீர் ஓரமாக நின்று கொண்டு, சித்திரான்னம் முதலிய வற்றைக் கமுகு மட்டைகளில் போட்டுக் கொண்டு உண்டார்கள்.

இன்னும் சில தைரியசாலிகள் சிறிது தூரம் தண்ணீரில் நடந்து சென்று வடவாற்றங்கரையை அடைந்து அங்கு நின்றபடி சாப்பிட்டார்கள். குழந்தைகள் சிலர் சாப்பிட்ட கமுகு மட்டைகளைத் கணவாய்களின் ஓரமாய் எறிய அந்த மட்டைகள் கணவாய்களின் வழியாக ஏரிக்கரைக்கு வெளியே விழுந்தடித்து ஓடி வருவதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தார்கள். ஆடவர்களில் சில வம்புக்காரர்கள் தங்கள் காதலிகளின் கூந்தல்களில் சூடியிருந்த மலர்களை அவர்கள் அறியாமல் எடுத்துக் கணவாய் ஓரத்தில் விட்டு ஏரிக்கரைக்கு மறு பக்கத்தில் அவை ஓடி வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் வல்லவரையன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அங்கு நின்ற பெண்களில் இனிய குரலையுடைய சிலர் பாடுவதையும் காது கொடுத்துக் கேட்டான். அவர்கள் ஓடப்பாட்டும், வெள்ளப் பாட்டும், கும்மியும், சிந்தும் பாடினார்கள்.

வடவாறு பொங்கி வருது
வந்து பாருங்கள் பள்ளியரே!
வெள்ளாறு விரைந்து வருது
வேடிக்கை பாருங்கள், தோழியரே!
காவேரி புரண்டு வருது காண
வாருங்கள், பாங்கியரே!

என்பன போன்ற வெள்ளப் பாட்டுக்கள் வந்தியத்தேவன் செவிகளில் இன்ப வெள்ளமாகப் பாய்ந்தன. வேறுசிலர் சோழகுல மன்னர்களின் வீரப் புகழைக் கூறும் பாடல்களைப் பாடினார்கள். முப்பத் திரண்டு போர்களில் ஈடுபட்டு, உடம்பில் தொண்ணூற்றாறு காயங்களை ஆபிர ணங்களாகப் பூண்டிருந்த விஜயாலய சோழனின் வீரத்தைச் சில பெண்கள் பாடினார்கள். அவனுடைய மகன் ஆதித்த சோழனுடைய வீரத்தைப்போற்றி அவன் காவேரி நதி உற்பத்தியாகு மிடத்திலிருந்து கடலில் சேரும் இடம் வரையில் அறுபத்து நாலு சிவா லயங்கள் எடுப்பித்ததை ஒரு பெண் அழகிய பாட்டாகப் பாடினாள்.

ஆதித்தனுடைய மகன் பராந்தக சோழ மகாராஜன் பாண்டியர்களையும் பல்லவர்களையும் சேரர்களையும் வென்று, ஈழத்துக்குப் படை அனுப்பி வெற்றிக்

கொடி நாட்டிய மெய்க்கீர்த்தியை இன்னொரு பெண் உற்சாகம் ததும்பப் பாடினாள். ஒவ்வொருத்தியும் பாடிய போது அவளைச் சுற்றிலும் பலர் நின்று கேட்டார்கள். அவ்வப்போது ஆ! ஆ! என்று கோஷித்துத் தங்கள் மகிழ்ச் சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

குதிரை மீது இருந்தபடியே அவர்களுடைய பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனை ஒரு மூதாட்டி கவனித்தாள். தம்பி! வெகு தூரம் வந்தாய் போலிருக்கிறது. களைத்திருக்கிறாய்! குதிரை மீதிருந்து இறங்கி வந்து கொஞ்சம் கூட்டாஞ் சோறு சாப்பிடு! என்றாள்.

உடனே பல இள நங்கைகள் நம் வாலிபப் பிரயாணியைப் பார்த் தார்கள். அவனுடைய தோற்றத்தைக் குறித்துத் தங்களுக்குள் இரகசியமாய்ப் பேசிக் கொண்டு கலகலவென்று சிரித்தார்கள். வந்தியத்தேவனை ஒரு பக்கம் வெட்கமும் இன்னொருபுறம் குதூகலமும் பிடுங் கித்தின்றன. அந்த மூதாட்டி சொற்படி இறங்கிச் சென்று அவள் தரும் உணவைச் சாப்பிடலாமா என்று ஒருகணம் சிந்தித்தான். அப்படிச் சென்றால் அங்கே நின்ற இளமங் கைமார்கள் பலரும் அவனைச் சூழ்ந்து கொண்டு பரிகசித்துச் சிரிப்பார்கள் என் பது நிச்சயம். அதனால் என்ன அத்தனை அழகிய பெண்களை ஒரே இடத்தில் காண்பது சுலபமான காரியமா?

அவர்கள் தன்னைப் பரிகசித் துச் சிரித்தாலும் அந்த ஒலி தேவகான மாகவே இருக்கும். வந்தியத் தேவனின் யௌவனக் கண்களுக்கு அந்த ஏரிக் கரையில் நின்ற நங்கைகள் எல்லாரும் அரம்பைகளாகவும் மேனகைகளாகவுமே தோன்றினார்கள்!

ஆனால் அதே சமயத்தில் தென் மேற்குத் திசையில் வடவாற்றின் நீரோட் டத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைச் சிறிது தயங்கச் செய்தது. வெள்ளைப் பாய்கள் விரிக்கப்பட்ட ஏழெட்டுப் பெரிய ஓடங்கள், வெண்சிறகுகளை விரித்துக் கொண்டு நீரில் மிதந்து வரும் அன்னப் பட்சிகளைப் போல் மேல்க்காற்றினால் உந்தப்பட்டு விரைந்து வந்து கொண்டி ருந்தன.

ஏரிக்கரையில் பலவகைக் களி யாட்டங்களில் ஈடுபட்டிருந்த ஜனங்கள் அத்தனை பேரும் அந்தப் படகுகள் வரும் திசையையே ஆவலுடன் பார்க்கத் தொடங்கினார்கள்.

அந்தப் படகுகளிலே ஒரு படகு எல்லாவற்றுக்கும் முன்னதாக விரைந்து வந்து ஏரிக்கரையில் குதித்திறங்கி அங்கே இருந்த ஜனங்களைப் பார்த்துப் போங்கள்! போங்கள்! என்று விரட்டி

னார்கள். அவர்கள் அதிகமாக விரடுவதற்கு இடம் வையாமல் ஜனங்களும் அவரவர்களுடைய பாத்திரங் கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு விரைந்து கரையேறத் தொடங்கினார்கள்.

வந்தியத்தேவனுக்கு இது ஒன்றும் விளங்கவில்லை. இந்த வீரர்கள் யார்? பின்னால் வரும் பாய் விரித்த படகுகளில் யார் வருகிறார்க்ள? எங்கிருந்து வருகிறார் கள்? ஒருவேளை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப் பார்களோ?

ஏரிக்கரையில் கையிலே கோல் பிடித்து நின்ற பெரியவர் ஒருவரை வல்லவரையன் அணுகினான். ஐயா! இந்த வீரர்கள் யாரைச் சேர்ந்தவர்கள்? அதோ பின்னால் வரும் அன்னக்கூட்டம் போன்ற ஓடங்கள் யாருடையவை? எதற்காக இவ் வீரர்கள் மக்களை விரட்டுகிறார்கள்? மக்களும் எதற்காக விரைகிறார்கள்? என்று கேள்விகளை அடுக்கினான்.

தம்பி! உனக்குத் தெரியவில்லையா என்ன? அதோ அந்தப் படகுகளின் நடுப்படகில் ஒரு கொடி பறக்கிறதே! அதில் என்ன எழுதியிருக்கிறது. பார் என்றார் பெரியவர்.

பனைமரம் போல் தோன்றுகிறது. பனைமரந்தான்! பனைமரக்கொடி பழு வேட்டரையர்கொடி என்று உனக்குத் தெரியாதா?

மகாவிரர் பழுவேட்டயரையரா வருகிறார்? என்று வந்தியத் தேவன் திடுக்கிட்டு குரலில் கேட்டான்.

அப்படித்தான் இருக்கவேண்டும் பனைமரக் கொடியை உயர்த்திக் கொண்டு வேறு யார் வரமுடியும்? என்றார் பெரியவர்.

வல்லவரையனுடைய கண்கள் அளவிலா வியப்பினால் விரிந்து படகுகள் வந்த திசையை நோக்கின. பழுவேட்டரையரைப் பற்றி வல்லவரையன் எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தான். யார்தான் கேள்விப்படாமலிருக்க முடியும்? தெற்கே ஈழநாட்டிலிருந்து வடக்கே கலிங்க நாடு வரையில் அண்ணன் தம்பிகளான பெரிய பழுவேட்டரையர். சின்னப் பழுவேட்டரையர் என்பவர்களடைய பெயர்கள் பிரசித் தமாயிருந்தன.

உறையூருக்குப் பக்கத்தில் வடகாவேரியின் வடகரையில் உள்ள பழுவூர் அவர்களுடைய நகரம் விஜயாலய சோழன் காலத்திலிருந்து பழுவேட்டரையர் குலம் வீரப் புகழ் பெற்றிருந்தது. அக்குடும் பத்தார் சோழமன்னர் குடும் பத்துடன் கொள்வினை கொடுப்பினை

செய்து வந்தனர். இது காரணமாகவும் அவர்களுடைய குலத்தொன்மை வீரப்புகழ் இவை காரணமாகவும் பழுவேட்டரையர் குலம் அரச குலத்தின் சிறப்புகள் எல்லாம் பெற்றிருந்தது. தனியாகக் கொடி போட்டுக் கொள்ளும் உரிமையும் அக்குலத்துக்கு உண்டு.

இப்போதுள்ள பழுவேட்டரையர் இருவரில் மூத்தவர் இருபத்து நான்கு போர்களில் ஈடுபட்டவர். அவருடைய காலத்தில் அவருக்கு இணையான வீரர் சோழ நாட்டில் யாருமில் லையென்று புகழ் பெற்றவர். இப்போது பிராயம் ஐம்பதுக்கு மேல் ஆகிவிட் டபடியால் அவர் போர்க் களங்களுக்கு நேரில் செல்வதில்லை. ஆனால் சோழ நாட்டு அரசாங்கத்தில் மிக உன்னத மான பல பதவிகளை வகித்து வந்தார்.

அவர் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி தான்யாதிகாரி தன பண்டார மும் தான்ய பண்டாரமும் அவருடைய அதிகாரத்தில் இருந்தன. அரசியலின் தேவைக்குத் தகுந்தபடி இறை விதித்து வசூலிக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது. எந்தச் சிற்றரசரையும், கோட் டத்தலைவரையும். பெரிய குடித்தனக் காரரையும் இவ்வாண்டு இவ்வளவு இறை தர வேண்டும்? என்று கட்டளை யிட்டு வசூலிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. ஆகவே சுந்தர சோழ மகாராஜாவுக்கு அடுத்தபடியாகச் சோழ சாம்ராஜ்யத்தில் இப்போது வலிமை மிக்கவர் பழுவேட்டரையர்தான்.

அத்தகைய மகாவீரரும் அளவிலா வலிமையும் அதிகாரமும் படைத்தவருமான பெரிய பழுவேட்ட ரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் பொங்கியது. ஆனால் அதே சமயத்தில் காஞ்சி நகரின் புதிய பொன் மாளிகையில் இளவரசர் ஆதித்த கரிகாலன் தன்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன செய்தி அவனுக்கு நினைவு வந்தது.

வந்தியத்தேவா! நீ சுத்த வீரன் என்பதை நன்கு அறிவேன். அத்துடன் நீ நல்ல அறிவாளி என்று நம்பி இந்த மாபெ ரும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக் கிறேன். நான் கொடுத்த இரு ஓலைகளில் ஒன்றை என் தந்தை மகாராஜாவிடமும் ஒப்புவிக்க வேண்டும். தஞ்சையில் இராஜ்யத்தின் பெரிய பெரிய அதிகாரிகளைப் பற்றிக்கூட ஏதேதோ கேள்விப்படுகிறேன். ஆகையால் நான் அனுப்பும் செய்தி யாருக்கும் தெரியக்கூடாது. எவ்வளவு முக்கியமான வராயிருந்தாலும் நீ என்னிடமிருந்து ஓலைகொண்டு போவது தெரியக்கூடாது. வழியில் யாருடனும் சண்டை பிடிக்கக் கூடாது நீயாக வலுச்சண்டைக்குப்

போகாமலிருந்தால் மட்டும் போதாது மற்றவர்கள் வலுச் சண்டைக்கு இழுத்தாலும் நீ அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. உன்னுடைய வீரத்தை நான் நன்கறிவேன். எத்தனையோ தடைவை நிரூபித்திருக்கிறாய். ஆகையால் வலிய வரும் சண்டையிலிருந்து விலகிக் கொண்டாலும் கௌரவக் குறைவு ஒன்றும் உனக்கு ஏற்பட்டு விடாது. முக்கியமாக. பழுவேட்ட ரையர்களிடமும் என் சிறிய தந்தை மதுராந்தகரிடமும் நீ மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நீ இன்னான் என்று கூடத் தெரியக்கூடாது. நீ எதற்காகப் போகிறாய் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரியக்கூடாது. சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்துக்குரிய இளவரசரும் வடதிசைச் சைன் யத்தின் மகாதண்ட நாயகருமான ஆதித்த கரிகாலர் இவ்விதம் சொல்லியிருந்தார். மேலும் வந்தியத்தேவன் நடந்து கொள்ள வேண்டிய விதங்களைப் பற்றியும் படித்துப் படித்துக் கூறியிருந்தார். இவையெல்லாம் நினைவு வரவே பழு வேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வல்லவரையன் அடக்கிக் கொண்டான். குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றான். என்ன தட்டி விட்டாலும் களைப்புற்றிருந்த அந்தக்குதிரை மெதுவாகவே சென்று கொண்டிருந்தது. இன்று இரவு கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கிவிட்டு நாளைக் காலையில் புறப்படும்போது வேறு நல்ல குதிரை சம் பாதித்துக் கொண்டே கிளம்ப வேண்டும் என்று மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டான். வரும்

---

## அண்மையில் இருக்கிறது கடல்

சங்கரராம சுப்பிரமணியன்

அண்மையில் இருக்கிறது கடல்
கண் சிமிட்டும்
வெள்ளொளி முடிச்சுக்களுடன்
அலைகள்
சலனம் வழி நிச்சலனம் நிகழ்த்தக்
காத்திருக்கிறது.
கால் வீச்சகல மணல் திட்டில்
விளையாடும் சிறுவனின்
வரையறுக்க இயலாத
ஆட்டத்தின் புதிர்கள்
எதையும் நகர்த்த இயலாத
வெற்றுத்தாள்கள் சூழ்ந்த
பிரதேசமாகி வருகிறது
என் கடல்
பற்றிக்கொண்ட மற்றொரு கனவின்
கிளையும் நழுவுகிறது என்னுடன்
பாதாளத்தை நோக்கி
என் தேநீர் கோப்பைக்குள் கவிழ
ஆரம்பித்து விட்ட சூரியனை
எப்படியாவது நகர்த்திட வேண்டும்
கடலை நோக்கி

# தவிடு பொடி

கலாபூசணம் எஸ்.ஜே. ஜெயக்குமார்



இறைவர் பசுவை ஆட்கொண்ட இறைவராகி விட முடியுமா? இந்த நவீன உலகில் கொம்பியூட்டர் மயப்படுத்தல் போல் இதுவும் இயந்திர'யுகம்' என்று சொல்லிப் பாரம்பரியத்துக்கு முழுக்குப் போட்டு விடுவார்கள்.

தமிழ் நாட் டில் அல்ல எமது நாட்டில் எமது யாழ் மண்ணில் தேரிழுப்பு அபூர்வ காட்சி ஒன்று முகநூல் இணையத்தளங்களில் மின்னின. நாங்கள் எதற்கும் சளைத்தவர்களில்லை என்று தோவடம் இழுப்பதில் தமிழ் பெண்களும் படையினரும் ஈடுபட்டது அதிசயம்?

தென்மராட்சியிலுள்ள கிராமம் ஒன்றில் சைக்கிள்கடை வைத்திருந்த வயோதிபர் ஒருவர் அடிக்கடி தனது சம்பாஷணைகளின் போது "தவிடு பொடி" என்ற வார்த்தையை பிரயோகிப்பர். அதனால் அவருக்குத் "தவிடு பொடி" என்ற பெயரே பிரபல்யமாகி விட்டது. இப்பொழுது இந்தத் தேர் இழுப்புக்களைப் பார்க்கும் போது "தவிடுபொடி" அன்பர்தான் நினைவில் வருகிறாார். ஏன் என்றால் எல்லாமே இப்ப "தவிடுபொடி" தான். அறிவியலாளர் சிந்தனைக்கு இது சமர்ப்பணம்

•

இந்த இருபததோராம் நூற்றாண்டில் காலம் வெகுவாக மாறிப் போயிட்டுது. நவீன விஞ்ஞான, தொழில் நுட்பங்கள்தான் உச்சத்தை எட்டிவிட்டனவே. கலாசாரம், மத அனுட்டானங்கள், பாரம்பரியங்களும் கூடத்தான் புதுமைகள் புகுத்தப்பட்டு அதிசயமாகி வருகின்றன.

கொடிபடரக் கம்பு இல்லாது பரிதவித்த முல்லைக் கொடிக்குப் பாரி வள்ளல் தனது தேரையே பந்தலாக்கிக் கொடுத்தான் என்பது இலக்கியம் கூறும் வரலாறு. இப்பொழுது எல்லாம் அடியார்கள் பக்தி மேலிட வடம் பிடித்துத் தேர் இழுக்கும் நிலைமாறி றோட்டுப்போடும் இயந்திரம் வடமிழுக்கும் அவலம் பற்றி யாரிடம் சொல்வது?

இதற்காக அந்த இயந்திர

# தந்திர நாடகத்தின் மிகச்சிறந்த நடிகை

விடுதலைப்புலிகள் இருந்த பொழுது சிங்களத் தலைமைகள் ஏற்றுக் கொண்ட வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய நிலம் அவர்கள் தம்மைத்தாமே ஆளும் சுயநிர்ணய உரித்துள்ளவர்கள் என்ற அடிப்படையில் பல இணக்கப்பாடுகள் எட்டப் பட்டிருந்தன ஆனால் தற்பொழுது அதனை மறுத்துரைக்கின்றீர்கள் விடுதலைப் புலிகள் இருந்தால் அத்தனையும் கிடைக்கும் என்றால் விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப் புலிகள் பற்றி பேசியதில் என்ன தவறிருக்கின்றது என தமிழ் தேசிய



**குறைந்தளவான அதிகாரம் கொண்ட இராஜாங்க அமைச்சு பதவி இருந்தென்ன? போயென்ன? பறித்தெடுக்கப்பட்ட இராஜங்க அமைச்சு பதவியை அடுத்த ஊடகம் ஒன்று விஜய கலா மஸேஸ்வரன் தனது அமைச்சு பதவியை துறந்தார் என்றே தலைப்பிட்டது. இதன் சூட்சுமம் தான் என்ன?**

கூட்டமைப்பு ஊடகப் பேச்சாளர் M.A சுமந்திரன் யதார்த்த பூர்வமான வினாவொன்றை எட்டியாந் தோட்டை ருவன்வெலவில் நடைபெற்ற கூட்டத்தில் சிங்கள ஊடக வியலாளர்களை நோக்கி வினாவொன்றைத் தொடுத்திருந்தார்.

ஆனால் விஜயகலா மகேஸ்வரன் எந்த சூழ்நிலையில், விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் அவசியம் என்று கூறியது தென்னிலங்கையில் மட்டும் மன்றி தமிழ் தரப்பிலும் ஆதரவற்ற நிலையே காணப் படுகின்றது.

பொருத்தமற்ற வேளையில் அந்த கூற்று அவசியம்தானா? அல்லது ஏதோ நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அது நிகழ்ந்ததா? என்ற சந்தேகங்கள் மேலெழுந்த அதே வேளையில் விஜயகலா அவர்கள் அது தடுமாறி வந்த வார்த்தை எனவும் அதனை கருத்தில் கொள்ள வேண்டாம் எனவும் ரஞ்சன் ராமனாயக்கவின் தொலை தொடர்பில் பேசியது உலகறிந்த உண்மை

விளைவு தென்னிலங்கை போர்க் கொடி தூக்கியது. இராஜங்க அமைச்சர் பதவியை இழந்தார். குறைந் தளவான அதிகாரம் கொண்ட இரா ஜாங்க அமைச்சு பதவி இருந்தென்ன? போயென்ன?

பறித்தெடுக்கப்பட்ட இராஜங்க அமைச்சு பதவியை ஊடகமொன்று விஜயகலா மஸேஸ்வரன் தனது அமைச்சு பதவியை துறந்தார் என்றே தலைப்பிட்டது. இதன் சூட்சுமம் தான் என்ன? வடபுலத்திது யதார்த்தத்தினை உனர்ந்து கொள்ளாமல் பொது எதிர ணியைப் போல் உசுப்பேற்றி இனவாத கருத்துக்களைத் தூவியே பெரும் பாலான அரசியல்வாதிகளின் பிழைப்பு நடக்கின்றது. அந்த யுக்திகளின் மூலம் தமிழ் மக்களின் நாடி பிடித்து பார்க்க முற்பட்டாரோ என எண்ணத் தோன்று கின்றது. அதற்கு அவர் சார்ந்த கட்சியின் ஆசிர்வாதமும் கிடைக்கின்றது என்றே நடந்தேறும் அரசியல் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றது

விஜயகலா மகேஸ்வரன் தென் னிலங்கைக்கு வாய் தடுமாறிவந்த வார்த்தைகள் எனவும் வடபுலத்தில் வீரத்தமிழச்சியின் இன்னொரு வாரிசா கவும் தன்னை தானே பரப்புரை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் ஆக உச்சமாக மாகாண சபைத்தேர்தலின் ஒரு இராஜ தந்திரமோ எனவும் எண்ணத் தோன்று கின்றது. ஒரு ஊடக நண்பர் சொன்னார் முதலமைச்சர் பட்டியலில் மாவை, விக்கி,டக்ளஸ் தவிர விஜயகலாவின் பெயரும் அடிபடுவதாக இதன் உண்மை நிலவரம் மாகாண சபை வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்படு கின்ற பொழுது வெளிவரும்.

என்னதான் விஜயகலா மகேஸ்வரன் வாய்தடுமாறியோ அல்லது உளப்பூர்வமாகவோ விடுதலைப் புலிகள் பற்றி பேசியிருந்தாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் மீளுருவாக்கம் நடக்காதா என்ற நப் பாசையிலேயே இன்றும் காத்திருக் கின்றனர்.

■ **வர்ணன்**



என்று பரவலான விமர்ச னம் இருந்து வருகிறது.

வடக்கிற்கு வரும் பெரும்பாலான நிதி எந்த திட்டங்களும் இல்லாமல் திரும்பி போகும் நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில் தகவல் அறியும் சட்ட மூலத்தின் மூலம் முதல்வர் விக்கி தொடர்பில் புதிய தகவல் வெளியாகி யிருக்கிறது

அதாவது தனது விமானப் யணங்களுக்கு கடந்த நான்கு வருடங்

# விக்கி மகிந்தவிடம்பெற்ற விசேடசலுகை! அதிர்ச்சியில் ஆதரவாளர்கள்

2013ம் ஆண்டு முதல் வடமா கணத்தின் முதலாவது முதல்வராக நீதியரசர் விக்கினேஸ்வரன் கடமை யாற்றி வருகின்றார்.

ஆனாலும் அவர் முதல்வராக இருந்தும் மாகணசபை வெறும் தீர்மானங்களை நிறைவேற்றும் சபையாக மாத்திரம் இருக்கிறது என்றும் மக்களுக்கு தேவையான பணிகளை செய்வதில் செயற்திறன் குறைந்த சபையாகவே இருக்கிறது

களில் 22 இலட்சம் ரூபா செலவிட்டு இருக்கிறார் என்றும் கடந்த நான்கு வருடங்களில் வடக்கு முதல்வர் 48 விமான பயணங்களை மேற்கொண்டி ருக்கிறார் என்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

அத்தோடு இலங்கையின் வேறு எந்த மாகாண முதல்வரும் இந்த அளவு பயணங்களையோ செலவுகளையோ

செய்ததில்லை என்று புள்ளி விப ரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண முதலமைச்சர் முன்னாள் வடக்குமாகாண ஆளுனர் சந்திர சிறியின் மூலம் பெற்ற விசேட அனுமதியின் பெயரில் யாழில் இருந்து கொழும்பிற்குச் சென்ற விமானப்பயணங்களிற்காக இதுவரை யில் 22 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வாகனத்தில் கொழும்பு சென்றுவந்த நிலையில் முன்னாள் ஆளுனர் ஜீ.ஏ.சந்திரசிறி தான் கொழும்பிற்கு விமானம் மூலமே சென்று வருவதனால் முதலமைச்சரின் பயணத்திற்கும் மாகாணத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அரச நிதியில் அனு மதிக்கலாம் என விசேட அனுமதி யினை வழங்கினார்.

மகிந்தராஜபக்சவினால் வழங்கப்பட்ட இந்த அனுமதியின் பிரகாரம் 2014ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டு வரையான 4 ஆண்டுகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் அரச செலவில் 48 தடவைகள் விமானம் மூலம் கொழும்பிற்கு சென்று வந்துள்ளார்.

இதற்காகவே குறித்த 22 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா பணம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் முதலமைச்சர் 2014ம் ஆண்டில் 11 தடவைகளும், 2015ம் ஆண்டில் 13 தடவைகளும், 2016ம் ஆண்டில் 15 தடவைகளும் பறப்பில் ஈடுபட்டுள்ளதோடு 2017ம் ஆண்டில் 09 தடவைகள் பறப்பில் ஈடுபட் டுள்ளார்.

இவ்வாறு பயணித்த 48 தடவை களும் தன்னுடன் ஓர் உதவியா ளரையும் அழைத் துச்சென்றுள்ளார். அவ்வாறு அழைத்துச் சென்ற உதவி யாளருக்கும் மாகாண சபையின் நிதியே வழங்கப்பட்டுள்ளது. இவற் றின் அடிப்படையில் 2014,2015 ஆண்டுகளில் ஒரு சேவைக்காக 35 ஆயிரம் ரூபா வீதம் பணம் செலுத்தப் பட்ட நிலையில் 2016ம் ஆண்டு முதல் இன்று வரையில் ஓர் சேவைக்காக 58 ஆயிரம் ரூபா வீதம் பணம் செலுத்தப் படுகின்றது.

இதே நேரம் இலங்கையில் உள்ள 09 மாகாணங்களில் வேறு எந்த மாகாண முதலமைச்சரிற்கும குறித்த சலுகை தற்போது வரையில் வழங்கப்படுவது கிடையாது.

● நன்றி: இணையம்

# இதுவும் ஒரு கீதை



**எதையோ தொலைத்த.**
**தொலைந்துபோன**
**வெறுமையான நினைவுகள்**
**அவள் மனத்தில் புதைந்து**
**கிடக்கக் கிணற்றடியை நோக்கி**
**நடந்தாள் வள்ளி யம்மா.**

நீண்ட தூரப்பாய்ச்சலால் வீதி எங்கும் கிடந்த புழுதியெல்லாம் தன்மீது பூசிக்கொண்டு வேகமாகவந்த பிரபாவின் ஆட்டோ களைத்துவிட்டது.

தன் வேகத்தை மெதுவாகக் குறைத்துக்கொண்டு உருண்டு வந்து மூர்த்திவீட்டுப் படலைக்கு முன்னால் மூச்சு விட்டபடி நின்றது.

ஆட்டோவிலிருந்து பெரும் சலிப்புடன் இறங்கிய மூர்த்தி, மெல்லத் தன் நாரியை நிமிர்த்திக் கொண்டான்.

மூச்சுவிட முடியாமல் முட்ட முட்டப் பொதிந்து வாய்க்கட்டாக இறுக்கிக் கட்டப்பட்டிருந்த ஓர் உரப்பை மூட்டையையும் ஒரு சிறிய பையையும் ஆட்டோவிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியே இறக்கிக் கொண்டான் மூர்த்தி.

அதைத் தொடர்ந்து மூர்த்தியின் தாய் வள்ளியம்மா மெல்ல இறங்கிக் கொண்டார். கைகளைப் பிடித்து பக்குவமாக இறக்கிவிட வேண்டிய அளவுக்கு வள்ளி யம்மா ஒன்றும் அதிக வயதானவரில்லை.

காலம் அவளின் தலைமுடிகளின் கருமையை ஆங்காங்கே கடன் வாங்கியிருந்தாலும் ஐம்பது வயதை மிஞ்சி அவள் சென்றதில்லை.

இருந்தாலும் வள்ளியம்மா சிரிக்கும் போது விழும் கன்னக்குழிகள் மெல்ல நிரந்தரமாக இடம்பிடிக்க எத்தனித்துக் கொண்டுதான் இருந்தன.

பிரபாவின் ஆட்டோ வந்த வழியே திரும்பிச் சென்றுவிட்டது. மூட்டை முடிச் சுக்களுடன் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் மூர்த்தி. அவனைத் தொடர்ந்து தாயும் உள்ளே வந்தாள்.

முன்பெல்லாம் படலைக்குள் வரும் போதே ஒரு பலத்த சத்தத்துடன் மருமகளை அழைத்தபடியே தன் கணவன் மாணிக்கத்துடன் வருவாள் வள்ளியம்மா. ஆனால் இன்று அந்தச் சத்தம் தொலைந்து மௌனம் குடி கொண்டிருந்த அவள் மனத்தைப் போல். படலை விடும் சத்தம் கேட்டதும் "துலைவாரின்ரை ஆடுகள் படலை எப்பன் லீவாய்க்கிடந்தால் உள்ளால பூந்திடும்" என்றபடி அடுப்படியை விட்டு வெளியே வந்தாள் நீலாம்பரி.அங்கே தன் கணவனையும், மாமியாரையும் கண்டதும் அவள் கண்கள் அகல விரிந்து கொண்டன. மனம் நிறைந்து கனத்தது.

"மாமி! மாமாவை வெளியில விட்டுப் போட்டே வந்தனீங்கள்" என்று கேட்டவள் மாமியாரின் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் படலையடியை நோக்கி ஓடினாள். அவளுக்காக ஏமாற்றம் தான் காத்திருந்ததே தவிர மாமன் அங்கே இல்லை. மாமன், மாமி என்றால் நீலாம் பரிக்குச் சொல்ல முடியாதளவுக்கு விருப் பம். அதனால்தான் மாமன் அங்கே இல்லாதது அவளுக்குப் பெருத்த ஏமாற் றத்தை அவள் மனத்தில் விதைத்தது.

அந்த ஏமாற்றத்துடன் உள்ளே வந்த நீலாம்பரி ஏக்கம் கலந்த சலனத் துடன் மாமியாரைப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்த அந்தச் சந்தோசம், புன்னகை என்பனவற்றை மாமியாரின் முகமும் தொலைத்திருந்தது. "மாமி ஏன் மாமா வைக் கூட்டி வரேல்ல?"

அவளின் கேள்விகள் சில வினா டிகள் மௌனத்தில் கரைந்துபோக மாமி யார் மௌனமாக மெல்லத் தலையைக் குனிந்து தன் முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள். அந்த மௌனம் தான் நீலாம்பரியின் கேள்விக்குப் பதிலா?

இல்லை வள்ளியம்மா தன் முந் தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டதுதான் பதிலா? புரிந்ததும் புரியாததுமாய் அந்த இடத்திலேயே மெல்ல வேரூன்றிய மரம்போல் நின்றாள் நீலாம்பரி.அவள் இதயத்தில் எத்த னையோ கேள்விகள் பதிலை எதிர் பார்த்து ஏமாற்றத்துடன் தவித்தபடி... மரமாக மரத்துப்போய் நின்ற நீலாம் பரியை சுயநினைவுக்கு அழைத்து வந்தது மூர்த்தியின் குரல்.

"அம்மா கிணற்றடியில தொட்டியுக்க தண்ணி அடிச்சிருக்கும் கை, கால் கழுவிப்போட்டு வாங்கோ தண்ணி குடிப்பம்" என்றான்.

"மாமி தொட்டியடி வழுக்கும் பாத்துக் கவனமாய்ப் போங்கோ, துவாயும் சவர்க்காரமும் தொட்டியடி யிலைதான் கிடக்கு. தேடாதையுங்கோ சவர்க்காரம் காகமெடுத்துப் போடு மெண்டு வாளியாலை மூடிவைச் சிருக்கிறன்" என்றாள் நீலாம்பரி. எதையோ தொலைத்த, தொலைந்து போன வெறுமையான நினைவுகள் அவள் மனத்தில் புதைந்து கிடக்கக் கிணற்றடியை நோக்கி நடந்தாள் வள்ளியம்மா. அவள், தான் சுயமாக நடந்தாள் என்பதைவிட அவளை அவ ளின் பிள்ளைகள் நடக்க வைத்தனர் என்பதேநிசம்.

"என்ன நடந்தது, மாமா இல்லா மல் மாமி எங்கேயும் தனித்துச் சென்றதே இல்லை"அவ ஒரு குழந்தை மாதிரி. சிரித்துச் சிரித்துப் பேசிற அளவுக்குச் சிந்திக்கிற ஆற்றல் கிடையாது.

இன்று ஏன் மாமி மட்டும் தனித்து? வழமையாக மாமா, மாமி வரும் போதெல்லாம் மரக்கறிவகைகள், தானிய வகைகள், பழவகைகள், நெல்லுப் புல்லென்று எவ்வளவோ கொண்டு வருவார்கள். இன்று ஓர் உரப்பை மூட்டையுடன் மனதில் கவலை சுமந்தபடி"

அவர்கள் வந்து இஞ்சைதங்கும் சில நாட்கள் வீடே கலகலப்பாய் இருக்கும். பம்பலாய் பொழுது போகும். சந்தோசத்துக்கும், முசுப் பாத்திக்கும் குறைவிருக்காது

"இண்டைக்கு மாமியின்ரை முகத்திலை வெறுமை, சோகம், என்ன இது? "

நெற்றி நிறைஞ்ச குங்குமப் பொட்டோட மாமி சிரிச்சாளண்டா பூரணச் சந்திரன் கூடத் தோத்துப் போம். மாமி கதைக்கும் போது மாமா அவவைப் பார்த்து ஏதாவது நையாண டிக் கதை சொல்லுவார்.அப்பவெல்லாம் பாக்க வேணும், மாமியின்ரை முகத்தை. அவவின்ரை செக்கச் செவேல் எண்டு சிவந்த முகம் இன்னமும் சிவந்து போக மாமி வெக் கப்படும் அழகில் நடிகை பத்மினியே தோத்துப் போய் விடுவாள்.

சிந்தனைகள் நீலாம்பரியின் மனத்தில் சிக்கித் திணறடிக்க, நினை விழந்து நின்ற நீலாம்பரியைப் பார்த்தான் மூர்த்தி. "இஞ்சைபார் நீலாம் பரி! அம்மா இனி எங்களோடைதான் இருக்கப்போறா. அவவை நாங்கள் தான் பாக்க வேணும்."

"தங்கச்சியாலை இரண்டு பேரையும் வைச்சுப் பராமரிக்க ஏலா தெண்டு அம்மாவை நான் கூட்டி வந்திட்டன்."

"அப்பாவை தங்கச்சி பாப்பாள். அவர் தங்கச்சியோடை இருக்கட்டும்" என்ற மூர்த்தி மனைவியின் எந்தவித அபிப்பிராயத்தையும் எதிர்பார்க்காமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். மனைவியிடம் எதையும் கேட்க வேண்டும் என்ற நினைப்போ, அவளுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் என்ற சிந்தனையோ, மூர்த்திக்குக் கிடையாது.

எல்லாமே கட்டளையாக இருக்குமே தவிர எந்த வார்த்தைகளும் வேண்டுதலாக இருக்காது. இதுவரை அப்படி இருந்ததும் இல்லை எனலாம். வளர்த்த நாய் முகத்தைப்பார்ப்பது போல் கணவனின் முகத்தைப் பார்த்தபடி நின்ற நீலாம்பரி எதையோ சொல்ல நினைத்தாள். அவள் தன் மனதில் பட்டதை, சொல்ல நினைத்ததை சொல்லித் தீர்ப்பதற்கு அவளின் கணவன் அங்கே இருக்கவில்லை. அவளின் உணர்வுகள் உயிரற்றுப்போயின. அந்த இடத்தின் வெறுமை போல் அவளின் மனமும் வெறுமையாகக் கிடந்தது.

வானத்தைப் பார்த்து ஏங்கித் தவிக்கும் பாலைவன நிலம் போல அவளின் மனமும் கணவனிடம் எதையோ எதிர்பார்த்துத் தவித்தது. அந்தத் தவிப்பு இன்று நேற் றல்ல, இன்று நடந்த இந்த விடயத் திற்கு மட்டுமல்ல. திருமணம் முடித்ததிலிருந்து எத்தனையோ விடயங்களுக் காக ஏங்கித் தவித்ததுண்டு. நீலாம்பரி யின் வீடு ஒன்றும் பெரிய விசாலமான வீடு கிடையாது.

இப்போதுதான் அரை குறையாகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு சிறியவீடு. ஓர் அறை. அதற்கு முன்னதாக ஒரு சிறிய விறாந்தை.அந்த ஒரு அறைதான் படுக்கை அறை, சுவாமி அறை எல்லாமே. அது மட்டுமல்ல அண்டா குண்டா, தட்டு முட்டுச் சாமான் கள், லொட்டு லொடுக்கு எல்லாமே அந்த அறையின் ஒரு மூலை யைக் குத்தகைக்கு எடுத்திருந்தன.

அது மட்டும் என்று நினைக்காதீர்கள். எலி, மூஞ்சூறு கூட ஒரு பகுதியை வாடகை இல்லாமல் அடாத்தாக ஆக்கிரமித்திருந்தன. எலிகளின் தொல்லையால் அடுப்படிக்குள் வைக்க வேண்டிய காய்கறிகளும் இடம் தேடிக் கொண்டன. இவைகளை வெளியே வைத் தால் ஆட்கள் இல்லாத நேரம் பார்த்து இரண்டு கால் மிருகங்கள்

மேய்ந் துவிடும். அந்தப் பயத்தால் எல்லாமே அந்த அறையில்தான் பதுங்கிக் கொண்டன. அடுப்படி வீட்டுக்குப்பக்கத்தில் அக்கினி மூலையை அண்டிப் புறம்பாக ஒரு கொட்டில் போட்டுக்கிடுகால் வேய்ந்து சுற்றிவர மட்டை வரிந்திருந்தது.

சிலவேளைகளில் நாய், பூனை களின் இரவுப்படுக்கை அறை அதுவா கவே இருந்தது. நாய்கடி, பூனை கடி என்பார்கள், என்னமோ தெரியாது அடுப்படிக்குள் அந்த நாயும், பூனை யும் சண்டை போட்டதே கிடையாது.

நீலாம்பரியின் வீட்டுவேலி தாண்டி ஒரு சிறிய தோட்டக்காணி அங்கேகூட ஒரு சிறிய வீடு இருந்தது. அதுவும் நீலாம்பரியின் சீதன நிலம் தான். இந்தக் காணி வாங்கி வீடு கட்டுவதற்குமுன், அவள் தாய் தந்தையுடன் பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து அதில் தான் வசித்து வந்தாள்.

அவளின் திரு மணத்தின் பின்னர் தாய் தகப்பன் மாங்குளத்தில் குளக்கரையாக நாலுஏக்கர் காணி வாங்கி வயல் தோட்டம் என்று செய்து வருகின்றனர். அவர்கள் மகளிடம் வந்து போகும் போதெல்லாம் அந்தத் தோட்ட வீட்டில் தான் தங்குவதுண்டு.

அதற்காகவே நீலாம்பரி தோட்ட வீட்டையும் துப்பரவாகவே வைத்திருந் தாள். கணவனுடன் எதையும் கதைக்க முடியாதென்ற எண்ணத்தில் ஒரு நீண்ட பெருமூச்சுடன் அடுப்படிக்குள் சென் றாள்.

அங்கே காலையில் அவித் துவைத்த ஆலங்காய்ப் புட்டு இருந்தது. அந்தப் புட்டுடன் தேநீரையும் போட்டு எடுத்துக்கொண்டு வெளியே மாமியா ரிடம் வந்தாள். தன் மனச்சுமைகளை இறக்கி வைக்க முடியாமல் தவித்த வள்ளியம்மா அந்த விறாந்தையில் சுவருடன் சாய்ந்தபடி உட்கார்ந் திருந்தரர்.

தான் கொண்டு வந்த சாப்பாட் டையும், தேநீரையும் மாமியாரின் அருகிலே வைத்துவிட்டுத் தானும் உட்கார்ந்து கொண்டாள்.

தன்னைப்பார்த்த மாமியாரின் முகத்தைப் பார்த்தாள் நீலாம்பரி. ஏதோ ஒரு விதத் தவிப்பு, வெறுமை, ஏக்கம் என்பன அந்த முகத்தில், அந்தப் பார்வையில் நிறைந்திருந்ததை நீலாம்பரி யால் புரிய முடிந்தது.

அவள் மாமியாரில் நிறைந்த பாசம் கொண்ட வள். மாமியாரின் முகத்தைப் பார்த்த வளின் கண்கள் மெல்லத் துளிர்த்தது. வார்த்தைகள்

தொண்டைக்குள் மௌன மானது. தன்னைச் சமாளித்தபடி "மாமி! என்ன யோசிக்கிறியள். என்ன மாமி தூரம் பிறத்தியே, உங்கடை பிள்ளை யோட தானே இருக்கப்போறியள்."

"ஏன் நான் இல்லையே? நானும் உங்களோடைதானே இருக்கிறன். கவலைப்படாதேங்கோ. யோசிக்காமல் சாப்பிடுங்கோ. தண்ணியைக் குடியுங்கோ"

"நான் இப்ப சமைச்சுப் போடுவன் சாப்பிடலாம்." என்றவள் மாமியாரின் கையில் பிட்டை எடுத்துக் கொடுத்தாள். சாப்பாட்டையும், தேநீரையும் பார்த்த வள்ளியம்மாவின் கண்கள் நீராடை உடுத் திக் கொண்டது.

இது அனைபோட்டுத் தடுக்க முடியாத வேதனையின் வெளிப்பாடு.

"எனக்குத் தேத்தண்ணி போதும் பிள்ளை புட்டு வேண்டாமெணை. தம்பியும் நீங்களும் சாப்பிடுங் கோம்மா"

என்றபடி இரண்டு கைகளாலும் தேநீர்க் கோப்பையை வாங்கிப் பருகத் தொடங் கினாள். "மாமி ஏன் இப்படி இருக்கின்றா" அவவின் முகம் இப்படி வாடியிருந்ததை நீலாம்பரி எப்பவுமே பார்த்ததில்லை.

அசோகவனத்தில் சீதைபோல்,

ஏதோ ஒரு மாற்றம்
மாற்றமா?
கவலையா?
பிரிவின் துயரமா?
யாரை?
மகளையா?
மாமாவையா?

தான் பிறந்து வளர்ந்த வீடு வாசலையா? எதைப்பிரிந்த கவலை?

எல்லாவற்றையும் தானா?

நீலாம்பரியால் புரியமுடியவில்லை. மாமியாரைக் கேட்கவும் மனதில்லை.

மனது கவலை சுமந்து மெல்லக் கனத்தது. அந்த இடத்தை விட்டு மெல்ல நகர்ந்தாள். நாட்கள் நகர மறுத்தன, ஆளுக்கொரு பக்கம். உயிரிழந்த சிரிப்புக்கள். உண்மையில்லாத பொய் முகங்கள். எப்படியோ நாட்கள் சில நொண்டியாகவே நகர்ந்தன.

மாமாவுடன் மாமி வந்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றாள் நீலாம்பரி. பட்டாம் பூச்சிகள் கூட்டமாகச் சிறகடிக்கின்றன அவள் மனத்தில். மாமியாரின் மடியில், அவள் ஒரு பெத்த பிள்ளைபோல் தலை சாய்ந்த நினைவுகள்...

(தொடரும்)

**■ ஆர்.எஸ். ஆனந்தன்**

# முதலமைச்சரா காரணம்?



இன்றைய காலகட்டங்களில் எமது எதிர்காலத்தின் போக்கினை எண்ணிப்பார்க்கையில் எமது நிலை மிகவும் இக்கட்டான நிலையில் இருந்து மிகவும் மோசமான பாதைக்கே எம்மை வழிநடத்திப் போகின்றது.

இன்றைய சமூக சூழ்நிலை அன்றைய சமூக சூழ்நிலைகள் போன்று இல்லாது அன்றைய சூழ்நிலைகள் எவ்வாறு இருந்தனவோ அவ்வாறு இல்லாமல் அன்றும் இன்றும் என்ற சொல்லிற்கமையவே எதிர்மாறாக உள்ளது. களவு கொலை, கற்பழிப்பு, அரசியல் அதிகாரம் பதவி அதிகாரம், ஊழல் போன்ற வற்றுடன் சொல்லில் அடங்காத சிறுவர் துஸ் பிரயோகங்கள், பாலியல் கொடுமைகள் போன்றன இக்காலத்தில் எமது மக்கள் பெற்றுள்ள பல புண்ணிய ஆன் மாக்களின் சாபங்களாகவே எனது பார்வையில் நான் விளங்கிக் கொள்வன.

இவற்றுக்கெல்லாம் காரணங் களாக மிக முக்கியமாக இளைஞர் யுவதிகளுக்கான வேலையில்லாத் திண்டாட்டங்களும் வெளிநாட்டுக் காசுகளின் வருகையும் என்றே நான்

அடித்துக் கூறுவேன்.ஏன் நான் இவ்வாறு சொல்கிறேன் எனின் நாம் பொதுவாக சிந்தித்துப்பார்க்க வேண்டும். யதார்த்தமாக நாம் சிந்திக்கவேண்டும். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் நாம் பல நன்மைகளைப் பெற்றுக் கொண்டாலும் அதன் மூலமே பல தீமைகளை உருவாக்கிக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் என்பது இன்று வெளிநாடு ஒன்று இருப்பதாலேயே வசதியடைந்த ஒரு மாவட்டமாக மாறிவருகின்றது. இவ்வாறு மாறி வருகின்ற சூழ்நிலையில் சிறுவயதி லேயே சிறுவர் சிறுமிகள் கஸ்ரங்களை உணராத சூழ்நிலையிலேயே வளர்ந்து வருகின்றனர்.

அவ்வாறு வளருகின்ற மாணவ மாணவிகளுக்கு எதிர்காலத் திலும் இவ்வாறு எமக்கு காசு வரும் ஆகவே எமக்கான தேவைகளை நாம் தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் எமக்கில்லை என்றே பெரும்பாலான மாணவ மாணவிகள் தமது பாதையை மாற்றிக் கொள்கின்றனர்.

இவ்வாறான பாதை மாற்றமே அவர்களுக்கு எதிர்காலத்தினை வழி வகுக்கின்றது. மற்றும் சில மாணவர் மாணவிகள் இவ்வாறான வசதிபடைத் தவர்கள் அன்று அவர்கள் அவர்களின் கஸ்டங்களை அனுபவித்தாலும் அவர் களின் பெற்றோர்களின் கவனமின்மை காரணமாகவே அவர்கள் கட்டாக்காலி களாக உலவுகின்றனர்.

தமது வயதிற்கு மிகுந்த பெரி யோர்களினுடனான சேர்க்கை, அவர் கள் வாழும் ஆடம்பர வாழ்க்கை போன்ற ஏக்கங்கள் அவர்கள் மனதிலும் கறுப்பு விதைகளாக விதைக்கப் படுகின்றன.

அவ்விதையானது காலப் போக்கில் விருட்சமாக மாறுவதனால் அங்கே ஆரம்பமாகின்றது எமது மக்க ளின் எதிர்காலத்திற்கான வித்து. இவ்வாறான மாணவர்கள் தமது நிலை யினை கல்விசார்ந்து உயர்த்திக் கொள் ளாது பகட்டு வாழ்க்கையில் மூழ்கிக் கொள்வதால் எம் தமிழர்களின் பாரம் பரியங்கள், வரலாறுகள் போன்றவற்றை துச்சமாக தூக்கிப்போட்டுவிட்டு அவர் கள் தன்னிலை மறந்து செயற்படு வதனாலே இவ்வாறான சூழ்நிலை எம்மைச்சூழ்ந்து கொள்கின்றது.

இந்நிலை தொடர சினிமா வாழ்க்கையை தமது ஒரு வாழ்க் கையின் பகுதியாக பார்க்கின்றவர் களும் இருக்கிறார்கள். பெற்றோர்க ளுக்கும் பெரியோர்களுக்கும், பயப் படாதவர்கள், ஆசிரியர்களுக்கு மதிப்ப

ளிக்காதவர்கள், அயலவர்களைப் பேணாதவர்கள், சொந்த பந்தங்களைத் தொடராதவர்கள், இவ்வாறானவர்களே இன்று சிறுவயதிலே போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றார்கள்.

இவ்வாறான போதைப் பொருட்களைப் பாவிக்கிறவர்கள் தமக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக களவு செய்கின்றார்கள்.

களவு செய்வதற்குத் தடையாக வருபவர்களை வெட்டுகிறார்கள். கோபத்தில் கொலையும் செய்கின்றார்கள். பின்னர் அவர்கள் பெரிய பெரிய சம்பவங்களுக்கும் பெரிய பெரிய (contcts) தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

இது எவ்வாறு எனில் அவ்வாறானவர்கள் பொலிசாரிடம் பிடிபடும் நிலையில் பொலிசாரிடம் நட்புக் கொள்கிறார்கள், பின்னர் உணர்ச்சி வசப்படும் வக்கீல்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுடன் நட்புக் கொள்கிறார்கள். அவர்கள் பின்னர் ஜாமினில் எடுத்து நல்ல புத்திமதிகள் கூறுவது போல்க் கூறி, தாம் இணைந்த தமது அரசியல்க் கட்சிகளில் சேர்க்கின்றார்கள்.

அப்புறம் அவர்கள் பதவி மோகம் பிடித்த அரசியல்வாதிகளினால் மூளைச்சலவை செய்யப்பட்டு உசுப்பேற்றப்படுகிறார்கள், மக்களுக்காய்ப் பாடுபட்டு தமது சுயநல வேலைகளைப் புறந்தள்ளி இராப்பகல் பார்க்காது அங்கும் இங்குமாக அலைந்து மக்களுக்காய் வேலை செய்யும் ஆழமுள்ள அறிவை ஆயுதமாக வைத்து தமது பேச்சுத்திறமையையும் சமயோசிதப் புத்தியையும் கூரான வாளாக ஏந்திப் போராடும் அரசியல்வாதிகளின் மக்களுக்கான நேரடிச் சந்திப்புகளில் எழுந்து குழப்புதல் தவறான வார்த்தைகளால் பேசுதல் போன்ற குட்டை குழப்பிகளாக உரு வெடுக்கின்றனர்.

இச்செயற்பாடு எமது ஒற்றுமையை உடைத்து தமிழ்மக்கள் ஓர் பலமற்ற ஒற்றுமை இல்லாத மந்தைக் கூட்டம் என்ற ஒரு கருத்தை வெளிப் படுத்தி உலக நாட்டுக்கும் வெளிப்படுத்தி எமக்கான பலத்தினை உடைத்து எமக் கான ஒரு அதிகாரப் பகிர்வுக்கு வழி வகுக்கத் தடையானவர்களாக உருவாகின்றனர்கள்.

இதற்கெல்லாம் ஒரு சில தகுதியற்ற அரசியல்வாதிகளே காரணம். அரசியல் என்பதே அனைத்திற்கும் ஆன ஒரு ஆயுதம் அதை நாம் சரியான பாதையில் வழிநடாத்தாவிடின் நாம்

உயித்தெழுவது என்பது மிகவும் கஸ்ரமான விடயம்.

இதற்கு நாம் அரசியல்ப் பாதையில் இருப்பவர்களையே அரசியலுக்குள் கொண்டுவருதல் வேண்டும். அப்பாதையில் இல்லாதவர் எவ்வளவு பெரிய உயரத்தில் இருந்தாலும் எவ்வளவு பட்டப் படிப்புகள் படித்தாலும் மிகப்பெரிய இறைபக்தனாக இருந்தாலும் அவரிற்கு அவ் அரசியல் ஞானமும் அரசியல் தந்திரமும் அரசியல் ஆளுமையும் இருந்தால் மட்டுமே நாம் அவர்களை அனுமதிக்க வேண்டும்.

இதற்கு உதாரணம் எமது மாகாணசபைத் தேர்தலும் இவ்வருட உள்ளூராட்சித் தேர்தலுமே எடுத்துக் காட்டாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எமக்கான 4800 வேலை வாய்ப் பிற்கான வெற்றிடங்களில் 800 மாத்திரமே நிரப்பப்பட்ட நிலையில் 4000 இப்போது சிங்கள தேசத்திற்கு திரும்பி அனுப்பப்பட்டுள்ளது. இச்சூழ்நிலை ஏன் முதலமைச்சரின் அதிகாரத்திற்கு உட்பட்ட வேலைவாய்ப்பு சீதனமாக 4000 மீள்நிரப்பப்படாது சிங்கள தேசத்திற்கு கொடுக்கப்பட்டதா?

உங்கள் குடும்ப சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் எம் 4000 தமிழ்க் குடும்பங்களின் வாழ்க்கையிலா விளையாட வேண்டும்.

ஏன் இந்த சுயநலம் எதற்காக இந்தப்பாவம். இனி வருங்காலங்களில் உங்களின் சந்ததியினர்களும் தான் இப் பூமியில் எம்முடன் வாழப்போகின் றார்கள்.

அதைச் சற்றும் நீங்கள் யோசிக்கவில்லையா? எத்தனை சந்ததியினரிற்கு நீங்கள் சேர்த்து வைக்கமுடியும்? ஒரு காலத்தில் இதே சூழ்நிலையில் உங்களின் சந்ததி யினரும் நான் மேற்கூறியவர்களில் ஒருவராக வரும் போது நீங்கள் செய்த பிழையினை எண்ணிப்பார்த்து வருத் தப்பட நீங்கள் உயிருடன் தான் இருப் பீர்களா? இல்லை விட்டுப்போன வருடங்களைத்தான் நீங்கள் சரிசெய் வதற்காக விரட்டிப் பிடிக்கமுடியுமா?

சற்றுச் சிந்தியுங்கள் உங்களால் முடிந்தவற்றை கட்டாயம் செய்யுங்கள் கொடூரமான செயல்களுக்கு கொடூ ரமான தண்டனைகளைக் கொடுக்க உங்களால் முடியாவிடின் மக்களிடம் பொறுப்பினை ஒப்படையுங்கள். தீர்ப்பு மகேசனின் தீர்ப்பாகவே இருக்கும்.

●

**■ அனோஜ்**

# உண்மையை எழுதுவது தான் ஊடக சுதந்திரம் திரிபுபடுத்தி எழுத்துவதல்ல...




தலைவர் தனது அறிமுகத்திலேயே ஊடகங்களால் விமர்சிக்கப்படுகின்றவர், ஊடகங்களை விமர்சிப்பவர் எனக் கூறியிருந்தார். இத்தலைப்பில் என்னை பேச அழைத்தபோது தேர்தல் கூட்டங்களில் உதயன் உட்பட மூன்று வெவ்வேறு பத்திரிகைகளை தூக்கிக் காட்டி தவறான செய்தி என பேசிய ஒருவனான என்னை இப்படியொரு பேச்சுக்கு துணிந்து அழைத்திருக்கிறார்களோ என யோசித்தேன்.

ஊடகங்களின் செல்நெறியும் ஊடகங்கள் பயணிக்க வேண்டிய திசையும் என்ற தலைப்பில் பேசும் போது உதாரணங்களின்றி பேசமுடியாது. அதிலும் உதயன் பத்திரிகைக்கு எதிரான உதாரணங்களையே கூடுதலாக சொல்ல தலைப்படுகின்றேன். இது உள்வீட்டு விவகாரம், நீங்களே அழைத்துள்ளீர்கள், நாங்கள் எங்களையே விமர்சனம் செய்வது நல்லது. ஆகையால் வெளி நின்று பேசுபவனாக அல்லாமல் உதயன் குடும்பத்தில் சேர்ந்து நின்று பேச விழைகிறேன்

பொதுவெளியில், நீதிமன்றிலே உதயனுக்காக வாதாடுகிறவனும் நான் தான் என்ற வகையில் அதற்கான தகுதியும் உரித்தும் சற்று எனக்கு

இருக்கின்றது என்பதால் அந்த உரித்தோடு சில உண்மைகளையும் பகிரலாமென நினைக்கின்றேன்.

இன்று காலையிலே ஒரு பத்திரிகை செய்தித் தலையங்கம் போட்டுள்ளது "முஸ்லீம் மக்கள் விவகாரம், தலைப்பில் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம்." என 28ம் திகதி இடப்பட்ட தலையங்கத்துக்கு மனம் வருந்தி இன்று (02.05.2018) ஒரு பிரசுரம் வந்துள்ளது. கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக தலைதூக்கும் முஸ்லீம் இன வாதம் (முஸ்லீம் இனவாதம் சிவப் பெழுத்தில்) என்று தலைப்பிட்டதுக்கு நான்கு நாட்களின் பின் இன்று மனம் வருந்துகிறார்கள்.

அதன் பின்னணியை சற்று ஆராய்ந்து பார்த்தால் இப்பத்திரிகை கிழக்கிலே சில ஊர்களிலே விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்ட பிறகு இந்த மன்னிப்புக்கோரல் இன்று பிரசுரமாகியுள்ளது. அப்பிரசுரத்தை சற்று வாசித்துப்பார்த்தால் 28ம் திகதி பிரசுரிக்கப்பட்ட செய்தி எங்களுடையதல்ல என அவ்வாசிரியர் கூறுகிறார்.

ஒரு பத்திரிகையின் முதன்மையான முற்பக்கத்தில் சிவப்பெழுதில் "முஸ்லீம் இனவாதம்" என இடப்படும் செய்திக்கு பொறுப்பேற்காமல் அது எங்களுடைய செய்தி அல்ல என்று கேவலமான முறையிலே மன்னிப்புக் கோரியுள்ளார் அவ் ஆசிரியர். இது இன்றைய தமிழ்ப் பத்திரிகைகளிலே இருக்கின்ற வருத்தத்திற்குரிய இலட்சணமாக இருக்கிறது.

இன்னொரு சிறிய உதாரணத்தையும் கூற விழைகிறேன். அண்மையில் ஒரே தினத்தில் யாழில் வெளிவந்த மூன்று பத்திரிகைகளின் செய்திகள் இவை.

(1) பெண் போலிஸுக்கு பிளேட் வெட்டு

(2) பெண் கான்ஸ்டபிள் கத்திக் குத்தில் காயம்.

(3) பெண் போலீசார் மீது புத்தூர் சந்தியில் வாள் வெட்டு.

ஒரே நாளில் வெளிவந்த மூன்று பத்திரிகைகளில் ஒன்றில் "பிளேட் வெட்டு" இன்னொன்றில் "கத்திக் குத்து" மற்றயதில் "வாள்வெட்டு" என்றிருந்தால் எதாவது ஒன்று தானே உண்மையாக இருக்கலாம்? அல்லது மூன்றுமே பொய் என்றே நினைக்கத் தோன்றும். அல்லது மூன்று பத்திரிகை கூறுவதால் எதோ ஒன்று இருக்கிறது, ஆனால் விபரங்கள் எதுவும் உண்மையில்லை என்று தான் நினைக்கத் தோன்றும். இப்படியொரு பத்திரிக்கைக்

கலாசாரத்தில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இன்னொரு உதாரணம் தந்தை செல்வா நினைவு உரையை அண்மையில் கலாநிதி. விக்கிரமபாகு கருணாரட்ன கடந்த 26ம் திகதி நடத்தியிருந்தார். 27ம் திகதி அவரது பேச்சு பத்திரிகைகளில் பிரசுரமானது. அந்நிகழ்வில் இருந்தவன் என்ற ரீதியிலும், அவர் சிங்களத்தில் பேசியதை சரியாக விளங்கிக் கொண்டவன் என்ற ரீதியிலேயும், அதை தமிழிலே சிவகுருநாதன் சரியாக மொழிபெயர்த்ததையும் விளங்கிக்கொண்டவன் என்ற ரீதியிலும் அந்தப் பத்திரிகைகளில் வந்த செய்தியை பார்த்தபோது அவை எனக்கு சரியாகவே பட்டது. ஆனால் அதற்கடுத்தநாள் 28ம் திகதி உதயன் பத்திரிகையில் வந்த ஆசிரியர் தலையங்கம் "தனிநாட்டுக்கான கோரிக்கை இன்னும் தணியவில்லையே" என இருந்தது. அதைப் படித்துப் பார்த்தால், கலாநிதி.விக்கிரமபாகு கருணாரட்ன, "தனிநாட்டுக்கு கோரிக்கையை நீங்கள் கைவிடக்கூடாது" என்று தனது உரையிலே சொன்னாராம். ஒன்றுக்கு மூன்று தடவை அவ்வாசிரியர் இவ்வாறு சொல்லுகின்றார். அதையும் விட, அவரே தெற்கிலிருந்து வந்து இப்படி சொல்லுகின்றார். இங்குள்ளவர்கள் அதை நாங்கள் கைவிட்டு விட்டோம் என எப்படிச் சொல்லலாம் என்ற தோரணையிலே அவ்வாசிரியர் எழுதியுள்ளார். இவ்வளவு செம்மையாக நான் செவிமடுத்த பேச்சிலே எதையாவது தவறவிட்டுவிட்டேனோ? இரு மொழிகளிலும் நான் கேட்டேன். ஒருதடவை நான் உதயன் பத்திரிகையில் தவறொன்றை சுட்டிக் காட்டியிருந்தபோது மொழிபெயர்ப்பாளர் மீது குறைபோட்டு விட்டார்கள்.

இவ்வாறு இருக்க நான் சென்று அவர் ஆற்றியிருந்த உரையின் காணொளியை மூன்று தடவைகள் முழுமையாக செவிமடுத்தேன். அவரது சிங்களம், பின் தமிழில் மொழிபெயர்ப்பு என மொத்தமாக ஆறு தடவைகள் கேட்டுப்பார்த்த போது ஒரு தடவையேனும் அவர் அப்படிச் சொல்லவில்லை. தெளிவாக தமிழரசு என கூறுகின்றார். ஆனால் ஒவ்வொரு தடவையும் தமிழரசு என்பதுடன் சேர்த்து சமஷ்டி என சொல்லுகிறார். இவ்வாறு சமஷ்டி அமைப்பிலான தமிழரசு என்பதை தெளிவாக அவர் கூறியிருக்க, சிவகுருநாதனும் அதை சரியாகவே மொழிபெயர்த்திருக்க, தமிழரசு என்ற தனிநாட்டுக் கோரிக்கையை நீங்கள் கைவிடக்கூடாது என அவர் கூறியதாக ஆசிரியர் தலையங்கத்திலே இவ்வாசிரியர் எழுதியுள்ளார்.

அக்கூட்டத்திற்கு வந்தவர்கள் சொற்ப எண்ணிக்கையானவர்கள்.

ஆசிரியர் தலையங்கத்தை வாசிக்கும் மக்கள் அநேகர் உள்ளனர். அவர்கள் என்ன நினைப்பார்கள்? விக்கிரமபாகு கருணாரட்ன தெற்கிலிருந்து இங்கு வந்து தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட வேண்டாம் என்று சொல்லிவிட்டு போயுள்ளார். என்றே நினைப்பர். அவர் அவ்வாறு சொல்லிவிட்டு சென்றிருந்தால் எனக்கு அதில் பிரச்சனையில்லை. ஆனால் சொல்லாததை சொன்னார் எனக் கூறுவதில் எனக்கு நிறைய பிரச்சனைகள் உள்ளன.

இன்று பத்திரிகை சுதந்திர நாள். இதை ஊடக சுதந்திர நாள் என்றும் சொல்வர். பத்திரிகைக்கு ஏன் சுதந்திரம் இருக்க வேண்டும்? எதற்காக? உண்மையை சொல்வதற்காகவே சுதந்திரம் இருக்கவேண்டும். அதுவே பத்திரிகைக்கான சுதந்திரம். பொய்யை சொல்வதற்கான சுதந்திரம் சுதந்திர மல்ல. அது பொய்! சுதந்திரம் எனும் சொல்லோடு எதிர்மறையான (negative) சிந்தனையை சேர்க்க முடியாது.

பொய் சொல்வதற்கானது என்பது சுதந்திரமல்ல,மாறாக உண்மையை சொல்வதற்கே சுதந்திரம்! ஆகவே பத்திரிகை சுதந்திர நாளிலே பத்திரிகைகளின் செல்நெறியும் பயணிக்க வேண்டிய பாதையும் என ஒரு தலைப்பை என்னிடத்தில் கொடுத்தால் நான் விசேஷமாக தமிழ்ப் பத்திரிகைகளுக்கு சொல்வது, நீங்கள் சென்றுகொண்டிருக்கும் பாதையிலிருந்து 180 பாகை திரும்பி நடவுங்கள். அப்போதுதான உங்கள் பத்திரிகைகளை நீங்கள் சுதந்திரமாக நடத்துவீர்கள்.

180 பாகை திரும்ப வேண்டும்! பொய் சொல்லுவது சுதந்திரமல்ல, பத்திரிகை சுதந்திரமும் அல்ல!. தெரிந்து கொண்டே சொல்லுவது மோசமான குற்றம்.

அண்மையில் உதயன் ஆசிரியரிடம் கேட்டேன், நான் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் ஆற்றிய உரையில் நான் சொன்னதாக ஒரு வாக்கியம் போட்டுள்ளீரகளே, நான் அப்படிச் செல்லவே இல்லையே என்று. நான் ஈ.பி.டீ.பியோடு பேரம் பேசவில்லை என்றெல்லாம் நான் கூறியதாக போடப்பட்டிருந்தது.

அந்தச் சொற்களையே நான் உபயோகிக்கவில்லை. காணொளி பதிவுகள் இதற்கு ஆதரமாக உள்ளது. பார்த்து உறுதி செய்து கொள்ளுங்கள். ஒருவர் சொன்னதாக சொல்வது ஒரு வகை. இன்னொன்று ஒருவர் கூறுவதை மாற்றமின்றி அப்படியே மேற்கோள்குறிகளுக்குள் இட்டு கூறுவது. நான் சொன்னதை கவனமாக ஒப்புவிக்க வேண்டும் என்பது கூறுவது போல மேற்கோள் குறிகளினுள் எழுதியுள்ளார்.

ஆனால் அதில் ஒரு சொல் லுக்கூட நான் சொன்ன சொல் இல்லை. (அவர் பின்னர் அது தவறு தான் என கூறி என்னோடு பேசியிருந்தார்) அதெப் படி வந்தது? இல்லாத ஒன்று மேற் கோள்குறிகளுக்குள் புகுந்து வந்து மக் களிடத்தில் அனுப்பப்படுவதன் நோக்கம் என்ன?

மே முதலாம் திகதி நிகழ்வு தொடர்பாக நானும், நண்பர் துரை ராஜ சிங்கமும் ஊடக சந்திப்பொன்றை நடத்தி வர்த்தக நிலையங்களும் ஏனை யவர்களும் எமக்கு ஒத்துழைக்குமாறு ஒரு கோரிக்கையை முன்வைத்து பேசு மாறு தலைவர் சேனாதிராஜா அவர்கள் கூறியிருந்தார்,

அவ்வாறே அதே ஊடக சந்திப்பில் நாம் எம் கருத்துக்களை கூறினோம். பேசும்வரை அமைதியாக கமராவை போட்டுவிட்டு அமர்ந்திருந்த ஊடகவியலாளர்கள் முடிந்தவுடன் அவர் கள் வைத்திருந்த கேள்விகளை கேட்டி ருந்தனர்.

அடுத்த நாள் பத்திரிகைகளை பார்த்தால் நாம் சொன்ன முக்கியமான விடயங்கள் எந்தப் பத்திரிகைகளிலும் இருக்கவில்லை. உதயனில் கடைசி ஒருவரியில் மட்டும் இருந்தது. வேறு எந்தப் பத்திரிகையிலும் நாம் எதற்கு ஊடக சந்திப்பு நடத்தினோமோ அந்தச் செய்தி இருக்கவில்லை.

நான் பின்னர் ஒவ்வொரு பத்தி ரிகை ஆசிரியர்களையும் ஒவ்வொ ருவராக தொடர்புகொண்டு நாம் நடத்திய ஊடக சந்திப்பின் நோக்கத்தை கூறி அதை பிரசுரிக்குமாறு வேண்டியிருந் தேன். அடுத்தநாள் உதயன் முற்பக்கத் திலும் ஏனைய பத்திரிகைகள் வெவ் வேறிடத்திலும் பிரசுரித்து இருந்தனர்.

நான் கூற வருவது என்ன வென் றால், அவ் ஊடக சந்திப்பில் வழமை யாக கேட்கவேண்டிய அவர்களின் அதே சில கேள்விகளையே கேட்டு அவற்றையே அடுத்தநாள் பிரதான செய்தி என்றனர். அதிலும் ஒரு கேள வியை திரும்பத் திரும்பக் கேட்டனர். "வடமாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளர் யார்?" அதற்கு நான் சொன்ன பதில் எந்தப் பத்திரிகையிலும் இடம் பெறவில்லை.

நான் ஒரு பதில் கேள்வியை கேட்டிருந்தேன். என்னருகில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் அவர்கள் அமர்ந்திருந்தார். கிழக்கு மாகாண சபை செயலிழந்து ஒரு வருடமாகிவிட்ட நிலை யில் அதற்கான தேர்தலை உடனடியாக வைக்க அழுத்தம் கொடுப்பீர்களா?

உங்களது கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்ற வாறான கேள்விகளை ஏன் ஒரு நாள் கூட எந்த ஊடகமும் கேட்கவில்லை? உங்களுக்கு கிழக்கு மாகாணம் வேண்டாமா? வெறுமனே வடகிழக்கு இணைப்பு என்பதை ஒரு கோஷமாக மட்டும் போட்டுக் கொண்டும் வட கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என இவர் கூறிவிட்டார் என்பதை மட்டும் கோடிட்டு காட்டிக் கொண்டும் இருப்பது தானா உங்கள் வேலை? உங்களுக்கு அது பற்றி எந்த அக்கறையுமில்லையா? எனக்கேட்டிருந்தேன். அதை பிரசுரித்து இருக்கதானே வேண்டும்! ஆனால் இல்லை!

கிழக்கு மாகாணத்தைக் குறித்து இதுவரை காலமும் கரிசனை இல்லை. அதைக் குத்திக்காட்டிய பின்னும் அக்க ரிசனை வரவில்லை என்பதில் என்ன தெரிகின்றது? கிழக்கு மாகாணத்தைப் பற்றி இவர்களுக்கு உள்ள இரட்டிப்பான கரிசனையின்மையே தெரிகின்றது. இப்படியாக இருந்துகொண்டு வடகிழக்கு இணைப்பு வேண்டுமாம். இன்றைக்கு கிழக்கில் முஸ்லீம் மக்களே வட-கிழக்கு இணைப்பு வேண்டாம் என்கின்றனர்.

ஆனால் கிழக்கின் கணிசமான தமிழ் மக்களும் வட-கிழக்கு இணைப்பு வேண்டாம் என கூற ஆரம்பித்து விட்ட னர். வெகுநாள் செல்லமுன்பே உங்க ளின் இக்கரிசனையின்மையால் பெரும் பான்மையான கிழக்கு வாழ் தமிழ் மக்களே இதை சொல்ல நேரிடும். நாங் கள் சொல்லும் யதார்த்த நிலைக்காக அல்ல.- உங்கள் கரிசனையின்மை யால்! எல்லாவற்றிற்கும் வடக்கு, ஆனால் கோஷத்திற்கு மட்டும், வடகி ழக்கு இணைப்பு வேண்டும்! இணைக்க விரும்புகின்ற நாம் அதற்கான வழி களை பின்பற்றுகின்ற போது, ஆ.. அது வேறு, அதை தொட்டுகூடப் பார்க்க கூடா தென்கிறனர்.

தமிழ் பேசும் முஸ்லீம் மக்க ளோடு இணங்கித்தான் வடகிழக்கு இணைப்பு சத்தியம் என நான் சொன் னால் அதை நான் இப்போது திரும் பவும் சொல்லுகிறேன்! வட கிழக்கு இணைப்பு வேண்டும் எனும் காரணத்தி னாலேயே இதை சொல்லுகிறேன்.

ஆனால் அந்த உறவை பாதிக்கும் வகையில் செயற்படுப வர்கள் தான் வட கிழக்கு வேண்டாம் எனும் பாணியில் பேசிக்கொண்டு கோஷம் மட்டும் எழுப்பிக்கொண்டு இருப்பவர்கள். பத்திரிகைகளும் இதற்கு உடந்தை. நான் எப்போதும் சொல்வது "இப்போதைக்கு வட கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை" என்பதே. ஆனால் "இப்போதைக்கு" எனும்

வார்த்தையை விட்டுவிடுவார்கள். நான் இப்போதைக்கு சாத்தியமில்லை என கூறுவது அந்த உறவு திருத்தப்பட வேண்டும். அவர்களும் இணங்கிவர வேண்டும் என்ற காரணத்துக்காகவே. அதற்கான முன்னெடுப்புக்களை மேற் கொண்டு வருகின்றோம். வடகிழக்கு இணைப்பை எதிர்க்காத கட்சியொன்று டன் இம்முறை தேர்தலில் கூட இணைந்து போட்டியிடலாமா என பரி சீலித்து பார்த்தோம். ஏனெனில் வடக் கில் அவர்கள் மட்டுமே வடகிழக்கு இணைப்பை எதிர்க்காத ஒரு முஸ்லீம் கட்சி. அவ்வாறு செய்திருந்தால் இவர்க ளோடு கூட்டு சேர்ந்து விட்டனர் என ஆர்ப்பாட்டம் பண்ணி இருப்பார்கள்.

ஈ.பி.டீ.பி உடன் கூட்டு சேர்ந்து விட்டனர் என பத்திரிகைகளே கூறிக் கொண்டு இருக்கிறது - நாங்கள் சொல் லவில்லை. அண்மையில் கூட ஆதாரங் களை வெளிப்படுத்தி அதை உறுதி செய்யுமாறு சவால் விடுத்திருந்தேன். யாராவது வெளிப்படுத்தினார்களா?

“அவர்களோடு இருந்து பேச் சுவார்த்தை நடத்தினீர்களா?” என்ற கேள்விக்கு எனது பதில் “அவர்களோடு இருந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவர்கள் ஒன்றும் பெரிய ஆக்க ளில்லை” என்பதே. ஆனால் ஊடகங்கள் அவர்களோடு பேசவில்லை



என எழுதியிருந்தது. பேசவில்லை என்பதற்கும் பேச்சுவார்த்தை நடத்த வில்லை என்பதற்கும் வித்தியாசம் தெரியாத ஊடகங்கள்!

மகிந்த ராஜபக்சவுடன் நாங்கள் பேசினோம். 2011 ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை மகிந்த ராஜபக் சவுடன் 18 சுற்று பேச்சுவார்த்தைகளை நாங்கள் நடத்தியது ஏதாவது தரப்போ கிறார் என்ற நம்பிக்கையிலா? ஆனாலும் அந்த நேரத்தில் பேச வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லையே.

மைத்திரியின் நல்லாட்சி பற்றி சொன்னவுடனேயே தலைவர் சேனா திராஜா அருகிலிருந்து சொன்னது அவ் வாறு நாங்கள் சொல்வதில்லையே என்பதே. எனக்கும் மனதில் வந்தது...

(வரும்)

# ஜப்னா கிற்ஸ்

## *Jaffna Kids @ Mother Care*



# வர்ஷன் எலக்ரோனிக்ஸ்

# Varsan Electronics

கொடிகாமம் வீதி, நெல்லியடி 021 226 2511

எம்மிடம் சகல விதமான எலக்ரோனிக்ஸ்
பொருட்களை நம்ப முடியாத விலைக்கழிவுடன்
பெற்றுக் கொள்ளலாம்

